HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

2016 ஜுலை - ஆகஸ்ட் இதழ்




பக்கம்-03




பக்கம்-07




# HNB கிராமின் ATM அட்டை இப்போது எம்மிடமும்

தயாரிப்பு – R.M.T. பியுமிகா
அங்கத்தவர், நகரக்கிளை
படப்பிடிப்பு – நிர்மான குணசேகர

## வாழ்க்கையின் அர்த்தம்



1971 செப்டெம்பர் 18ஆம் திகதி லான்ஸ் எட்வட் ஹன்டர்சன் என்ற பெயருடைய செல்லப் பிள்ளையொருவன் அமெரிக்காவில் பிறந்தான். குழந்தைக்கு இரண்டு வயதாகும் போது தந்தை குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். இதனால், குடும்பத்தின் முழுச் சுமையையும் தாயே சுமக்க வேண்டியேற்பட்டது. பின்னர் லான்ஸின் தாயார் மறுமணம் முடித்தார். சிறிய தந்தை லான்ஸை அன்பாக பாராமரித்ததுடன் பாகுபாடின்றி சிறுவயதில் இருந்தே உதவிகளை செய்து வந்தார்.

சிறிய தந்தையினர் பெயர் டெர்ரி கீத் ஆம்ஸ்ட்ரோங் (Terry Keith Amstrong). லான்ஸ் சிறுவயதில் விளையாட்டில் ஆர்வம் செலுத்தியதால் தாயும், சிறிய தந்தையும் அவனை உற்சாகமூட்டினர்.

லான்ஸ் 13 வயதாகும் போது குறும்புக்கார சிறுவனாக இருந்ததுடன் பல்வேறு விளையாட்டுகளில் கெட்டிக்காரனாகவும் திகழ்ந்தான். 16 வயதாகும் போது அவன் சிறந்த விளையாட்டு வீரனாக திகழ்ந்ததுடன் பல்வேறு பரிசில்களையும் பெற்றுக் கொண்டான். அவனுடடைய அயராத முயற்சி, அர்ப்பணிப்பினால் அவனுக்கு தொடர்ச்சியாக வெற்றி பெற முடிந்தது. பின்னர் லான்ஸின் பெயருக்கு முன்னாள் சிறிய தந்தையின் பெயரான லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங் (Lance Amstrong) என மாற்றிக் கொண்டான். அவனுக்கு மிகவும் பிடித்த விளையாட்டாக சைக்கிள் ஓட்டம் இருந்தது.

அதன் பின்னர் ஏனைய அனைத்து விளையாட்டுக்களை நிறுத்திவிட்டு சைக்கிள் ஓட்டத்தில் லான்ஸ் ஆர்வமூட்டினான். இதன் பின்னரே அவன் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டது. தனது வாழ்வில் அதிகமான நாட்களை சைக்கிள் ஓட்டப் போட்டிகளுக்கும், பயிற்சிகளுக்கும் என செலவிட்டான். தனது பயிற்சியினால் தான் அதிக போட்டிகளில் வெற்றி பெற முடிந்தது. பயிற்சிகள் இன்றி எந்தவொரு செயலிலும் வெற்றியில்லை என்பதை அவன் நன்கு அறிந்து வைத்திருந்தான். இவ்விதம் இருக்கும் போது அமெரிக்காவின் தேசிய சம்பியன்சிப் போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. இதனால், மிகக்குறுகிய காலத்தில் அமெரிக்காவின் சிறந்த சைக்கிளோட்ட வீராக புகழ்பெற்றான்.

1992ஆம் ஆண்டு லான்ஸ் மோட்டரோலா சைக்கிள் அணியில் இணைந்து அதன் பின்னர் தொழில்முறை வீரராக செயற்பட ஆரம்பித்தான். உலகில் சிறுவயதில் அதிகவேக சைக்கிளோட்ட வீரராக பெயர்பெற்ற லான்ஸ், கனடாவில் நடைபெற்ற உலக சைக்கிளோட்டப் போட்டியில் சிறந்த 100 பேரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டான். இது அவன் பெற்ற உயர்மட்ட வெற்றியாகும். இதேவேளை உலக சைக்கிளோட்ட போட்டியில் கலந்து கொண்ட அதிசிறந்த வெற்றியையும் பெற்றுக் கொண்டான்.

இந்தக் காலப்பகுதியில் அவனுக்கு உலகில் குணமாக்க முடியாத, தொற்று நோயல்லாத மரணத்தை ஏற்படுத்தும் ஒரு நோய் தொற்றியது. யாரும் அறியாத புற்றுநோயாகும். தனது புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து கொண்டவுடன் மனதளவில் பாதிப்படைந்தான்.

தனக்கு புற்றுநோய் ஏற்பட்டதை ஒரு சில நாட்களில் மறந்து மீண்டும் தனது வழமையான பயிற்சியை ஆரம்பித்ததுடன் சைக்கிளோட்டத்தில் ஆர்வம் செலுத்த ஆரம்பித்தான். போட்டிகளிலும் கலந்து கொண்டான். புற்றுநோய் ஏற்பட்டுள்ளதை பொருட்படுத்தாது 1999ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் பிரான்ஸில் நடைபெற்ற சைக்கிளோட்டப் போட்டிகளில் ஒவ்வொரு தடவையும் தங்கப்பதக்கத்தை






# உலக சாதனைப்படைத்த புற்றுநோயாளர்

பெற்றுக் கொண்டவன் என்பது விசேட அம்சமாகும். எந்தவொரு நபரும் தனக்கு இவ்வாறான நோய் ஏற்பட்டால் பயிற்சிகளிலோ, போட்டிகளிலோ கலந்து கொள்வதில்லை. எனினும், லான்ஸ் தனக்கு ஒரு நோய் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்து அதனைப் பொருட்படுத்தாது போட்டிகளிலும், பயிற்சிகளிலும் ஈடுபட்டு தங்கப்பதக்கத்தை சுவீகரிக்கும் வகையில் மனதை ஒருநிலைப்படுத்திய நபராக விளங்கினார். மன உறுதியின் உச்ச நிலை என்பதை உலகுக்கு வெளிக்கொணர்ந்த நபராகவும் திகழ்கிறார்.

அவ்வாறாயின் தமக்கு எவ்வித கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மன உறுதியுடன் செயற்படும் போது எதனையும் அடைந்து விட முடியும் என்பது லான்ஸின் வெற்றியில் இருந்து புலப்படுகிறது. லான்ஸ் புற்றுநோயுடன் தனது முழு பலத்தையும் வெளிப்படுத்தி வெற்றி பெற்றமையானது புற்றுநோய் இல்லாமல், நோயற்ற மற்றவர்களை தோல்வியுறச் செய்யுமளவுக்கு பிரசித்தி பெற்ற மனிதனாக திகழ்ந்தான். இந்த வெற்றிக்கு பின்னால் மறைந்து காணப்படுவது மனோபாவமும், உறுதியுமாகும். 2005ஆம் ஆண்டு லான்ஸ் சைக்கிளோட்டப் போட்டியில் இருந்து விலகினார்.

அதன் பின்னர் 2009ஆம் ஆண்டு மீண்டும் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டான்.

1997ஆம் ஆண்டு அவன் ஆம்ஸ்ட்ரோங் என்ற பெயரில் தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து புற்றுநோயாளர்கள் இலவசமாக பரிசோதனை செய்வதற்கும், ஆய்வுகளை செய்வதற்குமாக சுமார் 325 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்து ஆரம்பித்தான். இந்த நிறுவனத்தின் மூலம் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக சிகிச்சைப் வழங்க முடிந்தது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு துன்பம் அனுபவித்ததைப் போன்று மற்றவர்கள் எவ்வித கஷ்டமும் அனுபவிக்கக்கூடாது என்ற உன்னத நோக்கத்திற்காகவே இதனை ஆரம்பித்தான். மனிதனின் எதனையும் ஏற்றுக் கொள்ளும் சக்தியே வாழ்வின் திருப்புமுனையாக அமைகிறது. அதுவே அவனது வெற்றியின் அடிப்படையாக இருப்பதுடன் மற்றவர்களின் துன்பத்துக்காக தனது வாழ்வை அர்ப்பணிப்பதும் இவ் உலகில் விலைமதிக்க ஒன்றாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



*பிரேமசிறி கமகே*
*தலைவர், வியாபார அபிவிருத்தி நிலையம்*

# உள்ளத்தில் தோன்றிய கனவு நிறைவேறும் வரை தொடர்ச்சியாக முயற்சி செய்தேன்...



HNB GRAMEEN
EZY LOAN
கடன் இல்லை . . . நிவாரணமே...

பொலன்னறுவையில் இருந்து ஹிரிதலேவுக்கு செல்லும் வழியில் பாடசாலை செல்லும் சந்தியில் அமைந்துள்ள மலர்ச்செண்டுகள் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள் செய்யும் வேலைத்தளத்தை அறிந்திராத மக்கள் எவரும் இருக்கமாட்டார்கள். "சலன கொங்கிறீட்" என்ற பெயரில் காணப்படும் பெயர்ப்பலகை பார்ப்பதற்கு சிறிதாக காணப்பட்டாலும் அவர்களின் வியாபாரம் நாளாந்தம் வளர்ச்சியடைந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்து ஜெயதிலக. இன்றைய எமது கதையின் கதாநாயகி. HNB கிராமின் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நுயளல டுழயெ கடன் திட்டம் தமது வியாபார வளர்ச்சிக்கு வழிகாட்டியாக திகழ்ந்தமையால் ர்ழே கிராமின் நிறுவனமும் திருமதி இந்து ஜயதிலக்கவுடன் நெருங்கிய தொடர்பை பேணி வருகிறது. உண்மையாகவே வாழ்க்கையில் வெற்றி பெற்ற பெண்ணாக திகழும் திருமதி இந்து, தமது வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட முறை தொடர்பில் எமக்கு வழங்கிய நேர்காணலை கீழே தருகின்றோம்.

எனது கணவர் 1991ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் தொழில் புரிந்தார். அக்காலப்பகுதியில் விடுமுறைக்காக இலங்கை வந்தார். விடுமுறையில் வந்த போது எமது வீட்டு வேலைக்கு புளொக்கல் வாங்குவதற்காக ஒரு நிறுவனத்துக்கு சென்றோம். அப்போது புளொக்கல் உற்பத்தி செய்வதைப் பார்த்து எமக்கும் புளொக் கல் நிர்மாணிக்க முடியுமென்பதை உணர்ந்து கொண்டோம். அதன் பின்னர் எனது கணவர் ஒரு புளொக்கல் இயந்திரத்தை கொள்வனவு செய்தார். இரண்டு நபர்களை தொழிலுக்கு அமர்த்தி நாமும் புளொக்கல் தயாரிக்க ஆரம்பித்தோம்.

நாம் புளொக்கல் உற்பத்தி செய்த இரண்டொரு நாட்களில் எனது கணவர் மீண்டும் சவுதிஅரேபியாவுக்கு சென்றுவிட்டார். நான் ஆரம்பித்த அந்தத் தொழிலை தனியொருவராக நின்று தொடர்ந்து செய்ய முடிவெடுத்தேன். சுமார் 3000 இற்கும் அதிகமான புளொக்கல் உற்பத்தி செய்யப்பட்ட போதும் மூன்று மாதங்களாக எந்தவொரு கல்லும் விற்பனை செய்யப்படவில்லை. இப்போது எனக்கு தொழில் வேண்டாமென்று எண்ணத் தோன்றியது. இப்படி இருக்கும் போது ஒரு நாள் 1000 கற்கள் விற்பனை செய்யப்பட்டன.

எனக்கு எண்ணிலடங்கா மகிழ்ச்சி. என்னிடம் வேலை செய்த இருவரும் மிகவும் நேர்மையானவர்கள். அவர்கள் என்னிடம், நாம் புளொக்கல் மாத்திரம் அச்சிடுவதில் எவ்வித பயனும் இல்லை. கொங்கிறீட் தூண்கள், மலர்ச் செண்டுகள், கொங்கிறீட் நாட்காலிகள் போன்றவையும் உற்பத்தி செய்தால் நல்லதென்று கூறினார்கள். அவர்கள் கூறியவுடன் நானும் ஏற்றுக்கொண்டு உடனடியாக ஆரம்பிக்கத் தீர்மானித்தேன். எனது முயற்சி வெற்றிபெற்றது. படிப்படியாக எமது வியாபாரம் அதிகரிக்க பிரதேசமெங்கும் எமது பெயர் பிரபல்யமடைந்தது. நான் சிறிய இலாபத்தில் பொருட்கள் விற்பனை செய்ய வேண்டும்? என்ற கொள்கையை கடைப்பிடித்து வந்தேன். தொழிலில் நேர்மையை கடைப்பிடித்தேன். குறைந்த விலையில் தரமான பொருட்களை உற்பத்தி செய்ததால் நாளாந்தம் எமக்கு புதிய வாடிக்கையாளர்கள் எமது பிரதேசமெங்கும் இருந்து வருகை தர ஆரம்பித்தார்கள்.

இக்காலப்பகுதியில் தான் இன்டர்லொக் கற்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. நான் இதனை உற்பத்தி செய்து வீதியில் காட்சிபடுத்தியிருந்தேன். இன்டர்லொக் கற்கள் மூலம் பதைகள் செய்வதற்காக இடைநிலைத் தரகர்கள் எம்மிடம் வந்தார்கள். நான் மூன்று பாதைகள் செய்வதற்காக இன்டர்லொக் கற்களை விநியோகித்தேன். எனினும் ஓரிரு மாதங்களில் அந்த கேள்வி எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டது. ஏனென்றால் பிரதேச அரசியல்வாதிகள் உறவின-ர்கள் அந்தத் தொழிலை ஆரம்பித்தார்கள்.

மலர்சொண்டு, நாட்காலிகள் உட்பட பூங்காவில் காணப்படும் உற்பத்திகளை கொள்வனவு செய்யவரும் வாடிக்கையாளர்கள் அழங்கார செடிகள் வளர்ப்பதையும் செய்தால் எமக்கு இலகுவாக இருக்குமென்று கூறினார்கள். இதற்கு அதிகளவு பணம் தேவைப்பட்டது. பூச்செடிகள் உற்பத்தி செய்யவும் பசுமை இல்லம் தயாரிக்கவும் என்னிடம் பணம் இருக்கவில்லை. அவ்வாறே ஒரு வியாபாரத்தில் பெறும் தொகையை இன்னொரு வியாபாரத்தில் முதலீடு செய்ய நான் விரும்பவில்லை. எனினும் வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. கடனொன்றை பெற உத்தேசித்தேன். சரியான வங்கி எதுவென்று யோசித்துக் கொண்டிருந்த போது ர்ழே கிராமின் ஈசி லோன் பற்றி அறிந்து கொண்டேன். நான் கடனுக்கு விண்ணப்பித்து ஓரிரு நாட்களில் பணம் கிடைத்தமையை இட்டு நான் ஆச்சர்யமடைந்தேன். 8 இலட்சம் ரூபாவுக்காக நான் விண்ணப்பித்தேன். அந்தப் பணம் எவ்வித சிரமமும் இன்றி இலகுவாக கிடைத்ததுடன் பணம் கையில் இருக்கும் அளவுக்கு மீண்டும் செலுத்துவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது. அவ்வாறே ர்ழே கிராமின் ஊழியர்கள் எம்மிடம் வந்து தவணைப் பணத்தை அறிவிட்டுச் செல்கிறார்கள். இதனால் நாம் அலைக்கழிக்கப்படுவதில்லை.





2014ஆம் ஆண்டு திருமதி இந்து அலங்கார செடி வளர்ப்பை ஆரம்பித்தார். சுமார் இரண்டு ஆண்டுகளில் சிறந்த வியாபாரமாக மாறியுள்ளது. ஹிரதல் உட்பட பொலன்னறுவை, ஹிங்குராங்கொடை ஆகிய பிரதேசங்களிலும் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நான் ஈசிலோன் கடனைப்பெற்ற முழுமையாக செலுத்திய பின்னர் மீண்டும் 13இலட்சம் ரூபா கடன் பெற்றேன். இன்று கொங்கிறீட் உற்பத்திகள் ஒரு புறம் நல்ல வருமானத்தைப் பெற்றுத்தருவதுடன் இன்று என்னிடம் 15பேருக்கும் மேற்பட்டோர் தொழில் புரிந்து வருகிறார்கள். அவ்வாறே எனது கணவரும் என்னுடன் இணைந்திருப்பது எனக்கு இன்னும் மகிழச்சியாக இருக்கிறது. அவருடைய அனுபவம் மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி ஒரே தடவையில் 10 புளொக்கற்கள் உற்பத்தி செய்யும் இயந்திரமொன்றை தயாரிப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம். ர்ழே கிராமின் நிறுவனம் ஒரு நிதிநிறுவனம் மாத்திரமல்ல எமது இன்ப துன்பங்களில் பங்குபற்றும் நண்பனாகவும் இருக்கிறது.

இந்து ஜயதிலகவின் மென்மையான குரல் கொங்கிறீட் உற்பத்திகளின் ஒலியை மிஞ்சிவிடும் எனலாம்.







ஆக்கம்- மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படங்கள் - லக்ஷ்மன் குமாரதுங்க

புதிதாக சிந்திக்கும் போது புதிய யோசனைகள் உருவாகும்.

HNB GRAMEEN
2016 ஜுலை - ஆகஸ்ட்




# யுத்தமில்லாதிருந்தால் எமது வாழ்க்கை இதனை விட மேலும் சிறப்பானதாக இருந்திருக்கும் . . .

எம். சுமன்ராஜ் முகாமையாளர்
HNB கிராமின், வவுனியா கிளை





சிறு வயதில் நான்



திருமண நாள்





குடும்பத்தினர்

**முழுப் பெயர்:** மகாலிங்கம் சுமன்ராஜ்

**பிறந்த திகதி:** 1981.05.30

**பிடித்த பாடசாலை:** நான் யாழ்ப்பாணம் சுண்ணாகத்தில் பிறந்தேன். எனது தந்தை ஒரு தையல் தொழிலாளி. அம்மா வீட்டு வேலைகளை கவனித்து வந்தார். நாங்கள் மிகவும் எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தோம். இதனால் எனக்கு பாடசாலையில் தங்கியிருக்க படிக்க வேண்டியேற்பட்டது. நான் 10ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்லூரியில் படித்தேன். யுத்தம் கொடூரமாக நடைபெற்ற போதும் இடம்பெயர்ந்து வவுனியாவில் தஞ்சமடைந்தோம். நான் சாதாரண பரீட்சையை வவுனியா செட்டிக்குளம் கல்லூரியில் எழுதினேன். இந்த இரண்டு பாடசாலைகளில் யாழ்ப்பாண கல்லூரி எனக்கு விருப்பமான கல்லூரியாகும். ஹொஸ்டலில் தங்கியிருந்து படித்த ஞாபகங்கள் என்றும் மறக்க முடியாது.

**பாடம்:** கணித பாடத்தை விரும்பி கற்றேன்.

**விளையாட்டு:** கால்பந்து விளையாட்டு. 17, 18 வயதிற்குட்பட்டோர் பிரிவில் நான் விளையாடியுள்ளேன்.

**பாடசாலைக் காலத்தில் எதிர்கால இலட்சியமாக - இருந்தது :-** நான் இன்ஜினியராக வேண்டுமென்ற ஆசை இருந்தது. எனினும் யுத்தத்தினால் எமது வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தியது எனலாம். யுத்தத்தினால் எமது வீடுகள் அழிக்கப்பட்டன. கிராமத்தில் இருந்து நாங்கள் இடம்பெயர்ந்து கூலி வீடுகளில் - தஞ்சடைந்து வாழ வேண்டியேற்பட்டது. யுத்தத்தினால் தந்தை செய்து வந்த தொழிலும் இல்லாமல் போனது. இதனால் தந்தை இந்தியாவுக்கு தொழிலுக்கு சென்றுவிட்டார். எனது விருப்பமான துறையாக இருந்த கணித பாடத்தை உயர்தரத்தில் கற்று என்ஜினியராக வேண்டுமென்ற நோக்கத்தில் கல்வியைத் தொடர்ந்தேன். கல்வியின் மூலமே முன்னேற்றம் அடைய முடியுமென்பதை நான் அறிந்திருந்தேன். எனினும் எனக்கு ஒரு வருடம் மாத்திரமே உயர்தரத்தில் கற்க முடிந்தது. நாட்டில் இடம்பெற்ற வன்முறையினால் நாங்கள் தாய்நாட்டை விட்டுவிட்டு மலேசியாவில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றோம். அங்கிருந்த சில நாட்களில் மீண்டும் இலங்கைக்கு வந்து உயர்தரத்தில் வணிக பாடத்தை தெரிவு செய்து அதில் சித்தியடைந்தேன்.

**முதல் தொழிலும் ஆர்வத்துடன் செய்யும் தொழிலும்:** நான் ஆரம்பத்தில் ரெஸ்டூரன்ட் ஒன்றில் கெசியராக தொழில் புரிந்தேன். காலை 8.00 மணிக்கு ஆரம்பித்தால் இரவு 11.00மணி வரை தொழில் புரிய வேண்டும். போயா நாட்களில் மாத்திரமே விடுமுறை. ஆறு மாதத்தில் அந்தத் தொழிலில் இருந்து விலகிவிட்டேன். அதன் பின்னர் எனக்கு தெரிந்த ஒருவரின் உதவியுடன் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். எனக்கு வவுனியா கிளையில் வெளிக்கள ஊழியர் பதவி கிடைத்தது. எம்போன்ற வாழ்க்கையில் இடைநடுவில் கைவிடப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் இடமாக நான் கிராமின் நிறுவனத்தை நேசிக்கிறேன். இதனால், கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டதை பெருமையாக கருதுகிறேன்.

**வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:** 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி சுமார் 30 இலட்சம் பேர் காணி, உடைமை-களை இழந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தனர். அப்போது எனக்கு பதினான்கு வயது. இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயரும் போது நான் எனது பெற்றோரை இழந்துவிட்டேன். துவிச்சக்கர வண்டியின் மூலம் நான் எனது உறவினர்களை தேடிய போதும் கிடைக்கவில்லை. மக்கள் அன்றிரவு பாதையோரங்களில் இரவு பொழுதை கழித்தனர். எனக்கென்று ஒருவரும் இல்லாத நிலையில் பட்டினியுடன் அழுதவாறு நான் அன்றிரவு முழுவதையும் கழித்தேன். அன்றிரவு குண்டுச் சத்தம் எமது காதுகளை கிழித்துக் கொண்டு செல்வதைப் போல் இருந்தது. மிசைல் செல்வது எமக்கு நன்றாக விளங்கியது. எனது அச்சத்தை தெரிவிப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் சாவகச்சேரியில் இருந்த அடுத்தநாள் காலை வரை எமது குடும்பத்தினர் என்னைத் தேடி வரும் வரையில் நான் அழுதவாறு இருந்த அவ்விரவை என்றும் மறக்க முடியாது.

**வாழ்க்கையில் மிகவும் சந்தோசமான நாட்களும், துக்கமான தினமும்:** 2015ஆம் ஆண்டு வவுனியா கிளை சிறந்த கிளையாக தெரிவு செய்யப்பட்டு விருது பெற்ற அந்த நாட்களை எனது வாழ்வின் சந்தோசமான நாளாக கருதுகிறேன். நான் எனது தாய் மீது அதிக அன்பு வைத்துள்ளேன். எனினும் எனது திருமணத்துக்கு தாயாரின் அனுமதி கிடைக்கவில்லை. வாழ்க்கையில் முதல் தடவையாக தாயின் சொல்லைக் கேட்காமல் முடிவெடுக்க வேண்டியேற்பட்டது. அம்மாவின் மனதைப் புண்படுத்திய அந்த சம்பவத்தையிட்டு நான் இன்றும் துன்பப்படுகிறேன்.

**கடந்தாகலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பொன்று கிடைத்தால் வாழ்க்கையின் சிறந்த காலப்பகுதியாக கருதுவது:** கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டதை நான் சிறந்த காலப்பகுதியாக கருதுகிறேன். அக்காலப்பகுதியில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை கட்டியெழுப்ப நாம் உதவி செய்யக்கூடியதாக இருந்தது.

**வாழ்க்கையில் இழந்த பெறுமதிமிக்க நபர் அல்லது சந்தர்ப்பம்:** நான் படிப்பதில் ஆர்வம் காட்டியதை போலவே விளையாட்டிலும் அதிக ஆர்வமாக இருந்தேன். என்றாலும் யுத்தத்தினால் எமது திறமைகளை வெளிக்கொண்டு வர சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவ்விதம் எமக்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் இன்றிருப்பதை விட நல்லதொரு வாழ்க்கை கிடைத்திருக்கும்.

**திருத்திக் கொள்ள வேண்டுமென கருதும் . விடயங்கள் பற்றி. . .**

நான் மற்றவர்களை அதிகமாக நம்பிக்கை கொள்ளும் குணம் கொண்டவன். இதனால் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்துள்ளேன்.

**உங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதா?**

நான் சந்தைப்படுத்தல் பிரிவில் அதிக தகுதிகள் இருப்பதாக நான் கருதுகிறேன். மக்களுடன் வேலை செய்வதற்கான சந்தர்ப்பம் வெளிக்கள ஊழியராக பணியாற்றும் போது நான் அதனை நிரூபித்துள்ளேன்.

உங்கள் வாழ்வில் சந்தித்த சிறந்த நபர், அவர் அல்லது அவளிடம் காணப்படும் சிறப்பம்சங்கள்: எனது தாய். வாழ்க்கையில் அதிக துன்பங்களுக்கு மத்தியில் எம்மை இந்த நிலைமைக்கு கொண்டு வந்த பெருமைக்குரியவராகும். எனது தந்தை இந்தியாவுக்கு தொழிலொன்றுக்காக சென்ற போது எனது தாயார் தனியொருவராக இருந்து எம்மை பராமரித்து வந்தார். உண்மையாகவே பெருமைக்குரிய தாய்.

முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்: கிளிநொச்சி தேவாலயமொன்றில் நான் அவளை முதன் முதலாக கண்டேன். அந்த சந்திப்பின் பின்னர் நாமிருவரும் நண்பர்களாக பழக ஆரம்பித்தோம். அவள் அமுதா. 2008ஆம் நான் அவளை திருமணம் செய்து கொண்டேன்.

அந்தப் பெண்ணிடம் காணப்படும் சிறப்பம்சம்: நான் அவளிடம் கொண்டுள்ள அன்பை விட அவள் என்மீது அதிக அன்பு கொண்டவராக இருக்கிறாள்.

**வாழ்க்கையில் நீங்கள் திருப்தியடைகிறீர்களா?** இல்லாமல் . . . இன்று நான் நல்லதொரு தொழிலில் இருக்கிறேன். மூன்று பிள்ளைகளும் அன்பான மனைவியுடான ஒரு குடும்பம் இருக்கிறது. வாழ்க்கையில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிய எனக்கு இன்று அதனைவிட சிறந்த ஒரு காலம் உருவாகியிருப்பதால் நான் வாழ்க்கையில் ஏன் திருப்தியடையாமல் இருக்க வேண்டும் . . .?

தொடர்ச்சி 5...

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

# கவிதைச் சாளரம்

## உன் பிரிவை எப்படி சுமப்போம்

ஒன்றாக இருக்கும் போது அன்பாக
வேலை செய்து நாம் அனைவரும்
ஒருவர் விலகும் போது நாமனைவரும்
எப்படி ஏற்றுக் கொள்வது இக்குறையை

ஊமை உள்ளத்தில் சுமக்க முடியாத
அன்பெனும் மனித பாசம்
உனது பிரிவால் நாமனைவரும்
உள்ளம் உடைந்து நொந்துவிட்டோம்

நீயில்லா அந்த நாட்களை எண்ணி
நான் தினமும் உனை நினைந்து
மனமுருகி கவலையில் மூழ்கி
சிதறடிக்க எப்படி மனம் வந்தது உனக்கு

எமது நண்பர்களை கண்டு
அவர்களின் குரல் கேட்டு
மேலதிகாரிகளும் என்னவென்று கேட்டு
துருவித்துருவி கேட்க என்னதவம் செய்தாய்

சாமர ரத்னாயக்க

## எழுத்தறிவித்த எனது பாடசாலை



கொஸ்ஹேன கனிஷ்ட வித்தியாலய பழைய மாணவி
ஏடுதுடங்கிய அந்த நாட்களின் ஞாபகம் எனக்கு
இன்றும் மாறாத பாடசாலை வாழ்க்கை
எடுத்தறிவித்த என் பிதாவை நான் மறவேனா

மலை உச்சிகளுக்கு மத்தியில் சௌந்தர்யமிக்க
சிறுபாடசாலையாக காணப்பட்ட – பாதுகாப்புமிக்க
அந்த நாட்களை எப்படி நான் மறப்பேன்
நூறு முதல் நூற்றைம்பது மாணவர்களை

தரம் எட்டு வரை மாத்திரமே காணப்பட்ட
எமது பாடசாலையில் எவ்வித
வளங்களும் இன்றி பல்வேறு குறைபாடுகளுடன்
நாம் கற்றோம் சிரமத்துக்கு மத்தியில்

சிறுகுளத்தின் எல்லைக்கு அப்பால்
வீற்றிருக்கும் எம் பாடசாலை அழகிய
பெறுமதிக்க மரங்களும், நெல்லிக்காய் மரமும்
கனியும் வீதியெங்கும் பரந்து கிடக்க

மறக்க முடியுமா வாழ்நாள் முடியும் வரை
இன்றும் ஞாபம் அந்த நாட்களின் கையெழுத்து
பாடசாலை நாட்களின் மறக்காத அந்த நினைவுகள்
எழுத்தறிவித்த தாயின் மகிமை தொடரட்டும் . . .

டீ.ஏ. ஷாலட் விஜயசிறி
அங்கத்தவர் - ஹொரனை கிளை



## அன்பான குசான்

கனவுகளும் அல்ல
கற்பனையுமல்ல
காலங்களில் மட்டும்
உன் நினைவுகள் பேச

கருணை உள்ளம் கொண்ட
உமது உண்மையான
பாசம் இன்றுடன்
நிறைவுறுமா எம்மிடமிருந்து

உனது நிழல் இல்லையானாலும்
எம்முடன் தொடர்ந்து
கடந்த கால நினைவுகள்
என்றும் மறவாது உனதருளில்

எம்மைவிட்டு பிரிந்தாலும்
உலக நியதி அதுவொன்றே
நாம் உள்ளத்தால்
வாழ்த்துகிறோம் மனவாழ்வுக்கு

இரத்தினபுரி கிளையினர்

4ஆம் பக்க தொடர்

வாழ்க்கையில் திருப்புமுனையாக கருதுவது: கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டது. நான் இங்கு தொழிலுக்கு இணைந்த சந்தர்ப்பத்தில் இன்சுரன்ஸ் நிறுவனத்தில் இருந்தும் வாய்ப்பு கிடைத்தது. எனினும் நான் கிராமின் நிறுவனத்தையே தெரிவு செய்தேன். நான் அன்று எடுத்த முடிவினை இன்று மகிழ்ச்சியாக இருக்கிறேன். எனது வாழ்வில் அனைத்தும் வெற்றிபெறுவதற்கு இந்தத் தொழிலே காரணமாக இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

பாடகர்: ஹரிஹரன்

பாடல்: ஒன்றென்று இல்லை. 1990ஆம் தசாப்தங்களில் வெளிவந்த ஹரிஹரனின் பாடல்கள் அனைத்தும்

திரைப்படம்: பாட்ஷா

நாவல்: புலனாய்வு கதைகள், சாகஸ கதைகள்

எதிர்கால இலக்கு: நான் இந்தப் பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற எந்தவொரு நோக்கமும் என்னிடம் இல்லை. கஷ்டப் பிள்ளைகள், அநாதைச் சிறுவர்களை பராமரிக்கும் ஒரு நிலையமொன்றை ஆரம்பிக்க ஆசையாக இருக்கிறது. அவ்வாறே, சமூக சேவையில் ஈடுபடவும் நான் எதிர்பார்த்துள்ளேன்.

## சுப மங்களம்



HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட்டின் தலைமைக்காரியாலயத்தில் சேவையாற்றும் கிளை நிறுவனங்களின் முகாமையாளரான உதய பண்டார அவர்கள் சாமரிகா திலகரத்ன என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இவர்கள் இருவரும் மே மாதம் 27ஆம் திகதி சுபநேரத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.



HNB கிராமின் இடர் முகாமைத்துவம் மற்றும் இணங்குதல் பிரிவின் கணக்காளர் சமிந்த மனம்பேறி - திலினி தில்ருக்ஷி ஆகிய இருவரும் கடந்த ஜுலை மாதம் 21ஆம் திகதி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட இருவருக்கும் HNBகிராமின் பைனான்ஸ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# 2016 கிரிக்கட் கிண்ணம் யாருக்கு...?



HNB கிராமின் விளையாட்டுக் கழகம் மற்றும் ஊழியர் நலன்புரி சங்கம் இணைந்து வருடாந்தம் நடத்தும் மென்பந்து கிரிக்கட் போட்டியின் முதல் சுற்றுப் போட்டிகள் பிரதேச மட்டத்தில் நடைபெற்று வருகின்றன. பிரதேசமட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணி விபரங்களுடன் அவ்விதம் வெற்றி பெற்ற அணி வீரர்களை நாம் கீழே தருகின்றோம். கடந்த வருடம் நடைபெற்ற கிராமின் கழகங்களுக்கிடையிலான போட்டியில் புத்தளம் அணி கிண்ணத்தை சுவீகரித்தது. இவ்வருடம் கிண்ணம் யாருக்கு...?


காலி பிரதேசம் – காலி கிளை அணியினர்


கொழும்பு பிரதேசம் – ஹோமாகம கிளை அணியினர்


கண்டி பிரதேசம் – கேகாலை கிளை அணியினர்


களுத்துறை பிரதேசம் – களுத்துறை கிளை அணியினர்


குருநாகல் பிரதேசம் – நிக்கவரெட்டி கிளை அணியினர்


அநுராதபுரம் பிரதேசம் – பதவிய கிளை அணியினர்


பதுளை பிரதேசம் – வெலிமடை கிளை அணியினர்


கம்பஹா பிரதேசம் – நீர்கொழும்பு கிளை அணியினர்

## f பக்கத்தில் ....




நீங்கள் உங்களது தொழில் தொடர்பில் மற்றவர்களுடன் ஒப்பீடு செய்யாமல் தொழிலற்றிருக்கும் ஒருவர் நீங்கள் செய்யும் தொழிலை பார்த்து எனக்கு கிடைத்தால் நல்லதென்று கருதும் ஆயிரத்தில் ஒருவரைப் பற்றி சிந்தியுங்கள்.



உங்கள் உணவின் ருசியைப் பற்றி ஆராய்வதற்கு முன் சாப்பிட ஒன்றுமில்லதவர்கள் பற்றி சற்று ஆராயுங்கள்



நீங்கள் வாழ்க்கை மற்றவர்களுடன் ஒப்பிடுவதற்கு முன் குறைந்த வயதில் மரணிப்பவர்களை பற்றி சிந்தித்துப் பாருங்கள்.



Business Assessment



# வியாபாரத்தின் தன்மையை மதிப்பீடு செய்வோம்

வியாபாரமொன்றுக்கு கடன் வழங்கும் போது கடன் வழங்கும் நபரால் கடனுக்கு விண்ணப்பித்தவரின் குணநலன்களை அறிந்து கொண்டு அவர் தொடர்பாக மதிப்பீடு (Character Assessment) செய்ய வேண்டியது மிகவும் அவசியமென்பதுடன் கடனுக்கு விண்ணப்பிக்கும் வியாபாரம் தொடர்பாகவும் வியாபாரத்தை நடத்துவதற்கு அந்த நபரிடம் காணப்படும் தொழில்நுட்ப வசதிகள் தொடர்பாகவும் சரியான (Business Assessment) மதிப்பீட்டை அள விடுவது அவசியமாகும். இங்கு கடன் வழங்கும் நபரால் கடன் பெறும் நபர் அந்தப் பணத்தை முதலீடு செய்யும் வியாபாரம் வணிகத்துடன் தொடர்புடைய இலாபமீட்டும் வியாபாரமா, அதனை வெற்றிகரமாக நடத்தக்கூடிய ஆற்றல் கடன் பெறுவரிடம் காணப்படுகிறதா போன்ற அடிப்படை காரணிகள் தொடர்பில் அவதானிக்கப்படும். இது தொடர்பில் சரியான மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள வேண்டுமாக இருந்தால் கடன் வழங்கும் நபருக்கு வியாபாரமொன்று வெற்றிகரமாக இயங்குகின்றது தொடர்பில் மதிப்பீடு செய்யக்கூடிய அனுபவமும் ஆற்றலும் காணப்பட வேண்டும். அவ்வாறில்லையானால் இது தொடர்பில் அனுபவமுள்ள ஒருவரிடம் ஆலோசனை பெற வேண்டும். எனினும், நுண் நிதி முறையில் நாம் அந்தளவு உன்னிப்பாக மதிப்பீடுகளை செய்வதற்கான தேவைகள் இல்லை. ஏனென்றால் நாம் கடன் சிறுவியாபாரங்களுக்கு மாத்திரமே கடன் வழங்குகின்றோம். இதனடிப்படையில் கடனுக்கு பொறுப்பானவரிடம் காணப்படும் அனுபவமும் பழக்கவழக்கமும் இதற்கு போதுமானதாக இருக்கும்.

வியாபாரம் தொடர்பில் சரியான மதிப்பீட்டை பெறுவதற்கு SWOT Analysis என்ற திட்டத்தை நாம் பயன்படுத்துவதன் மூலம் வெற்றிகரமான மதிப்பீட்டை பெற முடியும். இந்த திட்டத்தின் மூலம் வியாபாரத்துடன் தொடர்புடைய சகல வழிகளையும் அடையாளம் காண முடியும்.

| | | |
|---|---|---|
| Strength | - | வியாபாரத்தின் பலம் யாருடையது |
| Weakness | - | அதில் காணப்படும் குறைபாடு என்ன? |
| Opportunity | - | அதனூடாக காணப்படும் வாய்ப்புகள் |
| Threat | - | வியாபாரத்துக்கு இருக்கும் தடைகள் (அச்சுறுத்தல்) (இயற்கை மற்றும் சமூக) |

### வியாபாரத்தின் அமைவிடம் (Business Location)

வியாபாரமொன்று தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது கடன்வழங்குபவரினால் வியாபாரம் நடைபெறும் அமைவிடம் தொடர்பில் முதலில் அவதானத்தை செலுத்த வேண்டும். வியாபாரத்தின் தன்மைக்கு ஏற்ப அது மாறுபடலாம். சாதாரண சில்லறை கடையாக இருந்தால் அது மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பிரதேசத்தில் இலகுவாக பொருட்களை பெற்றுக் கொள்ள கூடிய இடத்தில் அமைந்திருந்தால் நன்றாக இருக்கும். ஆனால், மிருகப் பண்ணையாக இருந்தால் உணவு, நீர் ஆகியவற்றை இலகுவாக பெற்றுக் கொள்ளும் இடத்தில் அமைந்திருந்தால் நன்றாக இருக்கும். அவ்வாறே வியாபாரத்தை எந்நேரமும் (Visibility) அவதானிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். கடன் விண்ணப்பதாரி கடன் பெறவுள்ள குறிப்பிட்ட வியாபாரத்துக்காக என்றால் அந்த வியாபார நிலையம் அமைந்துள்ள இடத்தை பார்த்தவுடன் ஒரு முடிவுக்கு வரக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறே அந்நிலையத்தில் பொருட்களை அடுக்க வைக்க செய்யப்பட்டுள்ள முறைகளும் கவனத்தில் கொள்ளலாம்.

ஏதேனும் கைத்தொழில் துறையாக இருந்தால் அங்கு பயன்படுத்தும் இயந்திரம் புதிதாக வாங்குவதற்காக கடனுக்கு விண்ணப்பித்திருந்தால் அதன் தற்போதைய நிலையை ஆராய்ந்து அதன் செயற்பாட்டில் ஏற்படக்கூடிய மாற்றங்களை வைத்து கடன் வழங்குவர் ஒரு தீர்மானத்தை எடுக்க முடியும்.

அவ்வாறே வியாபாரத்தை நடத்தும் கட்டிடத்தின் தன்மை (புதியதா அல்லது பழைய கட்டிடமா) மற்றும் அதன் உரிமை? உரிமையாளர் வேறொருவராக இருந்தால் வியாபாரத்தை தொடர்ந்து அதே இடத்தில் எவ்வளவு காலத்துக்கு நடத்த முடியும் என்பது தொடர்பில் எதிர்வுகூறலை தெரிவிக்கலாம். இதனடிப்படையில் வியாபாரத்தின் நம்பிக்கை (Reliability) தொடர்பில் எமக்கு ஒரு முடிவினை எடுப்பது கஷ்டமாக இருக்கும்.



வியாபாரத்தை நடத்தும் போது மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகள் என்பவற்றுக்கான செலவுகள் தொடர்பில் கடன் வழங்கும் அதிகாரியால் மதிப்பீடு செய்வது அவசியமாகும்.

### உள்ளீடு (Input)

வியாபாரமொன்றை நடத்தும் போது அதற்கான உள்ளீடுகள் அதிக செலவு கொண்டவையா, இதற்கான செலவுகளை ஈடு செய்ய முடியுமா போன்றன தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

### இயந்திரம் மற்றும் பொறிகள் (Machinery & Equipment)

வியாபாரத்துக்காக பயன்படுத்தும் இயந்திரங்கள் நல்ல நிலையில் இருக்கின்றதா என்பது தொடர்பிலும் அதன் பெறுமதி என்ன என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

### ஊழியர் (labour)

வியாபாரத்தில் எத்தனை ஊழியர்களை இணைத்துக் கொண்டுள்ளார் என்பது தொடர்பிலும் கடன்வழங்கும் அதிகாரி கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் அந்தத் துறையில் அனுபவம் பெற்றவர்களா, அவர்களுக்கு மாதந்தம் சம்பளமாக எவ்வளவு வழங்கப்படுகின்றது என்பது தொடர்பில் ஆராயந்து பார்க்க வேண்டும்.

### சட்டபூர்வ தன்மை (Legal)

வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் சட்டப்பூர்வ தன்மையும் அதனை நடத்துவதற்கான இடம் மற்றும் அமைவிடம் தொடர்பிலும் ஊழியர்கள் தொடர்பிலும் (ஊழியர்கள் நிறுவனத்தில் சட்டரீதியாக இணைத்துக் கொண்டுள்ளார்களா) சட்டத்தின் பாதுகாப்பு காணப்படுகிறதா என்பது தொடர்பில் அறிந்து கொள்வது அனைவரினதும் அவசியமாகும்.

### உற்பத்தி காலம் (Production Period)

கடனைப் பெற்றுக் கொள்ளும் வியாபாரத்தில் உற்பத்தி துறை மற்றும் அதனுடன் தொடர்புடையதாக இருந்தால் உற்பத்திக்காக எடுக்கும் காலம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும். எம்மால் வழங்கப்பட்ட கடன் தொகை வியாபாரத்தில் ஈடுபடுத்தியுள்ள வியாபாரி அதன் பெறுபேற்றை எதிர்பார்க்கும் கால அளவு நீண்டகால தன்மையுடையதாக இருந்தால் தவணைப்பணத்தை அறவிடும் போது பிரச்சினைகள் ஏதாவது ஏற்படுமா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு முதலீடு செய்யும் போது உற்பத்தி திறன் எவ்வளவு என்பது தொடர்பில் இங்கு அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

### களஞ்சிய வசதி (Storage)

வியாபாரத்திற்கான களஞ்சிய வசதி காணப்படுகிறதா, பொதியிடல் மற்றும் போக்குவரத்து வசதிகள் போதுமானதாக காணப்படுகிறதா என்பது தொடர்பில் கேட்டுக் கொள்ளல்.

### பேரம் பேசும் சக்தி (Bargain Power)

கடன் வழங்கும் வியாபாரத்துக்கு மேலதிகமாக பொருட்களை வாங்கும் போதும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்தும் போது பேரம் பேசும் சக்தி இல்லையானால் விலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி முடிவெடுப்பதற்கு கடன் வழங்கும் அதிகாரிக்கு அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு மேலதிகமாக வியாபாரத்துடன் தொடர்புடைய சந்தைக்கட்டிடத்துக்கான தூரம் மற்றும் பொருட்கள், சேவைகளின் விலை நுகர்வோனினால் ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது தொடர்பிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டியது கடன் வழங்கும் நபரின் அவதானத்துக்கு உட்பட வேண்டிய விடயங்களாகும்.



HNB கிராமின் பைனான்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணல்.

# வெற்றிப் பயணம் நோக்கி



## எமது தேவையை பூர்த்தி செய்யும் வகையிலான கடன் திட்டங்கள் கிராமின் நிறுவனத்தில் காணப்படுகிறது



எனது கணவர் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கதுருவளை நகரில் சசஸ்ரீ கொம்யுனிகேசன் என்ற பெயரில் இந்த வியாபாரத்தை ஆரம்பித்தார். நாம் வியாபாரத்தை ஆரம்பித்த சிறிது காலத்தில் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டதுடன் நாளாந்தம் எமது செலவுகளை ஈடு செய்யுவதற்காக கிராமின் நிறுவனத்தில் கடன் எடுத்தோம். விசேடமாக கதுருவளை நகரில் பல்வேறு நிதி நிறுவனங்கள் காணப்பட்டாலும் எமது தேவையை பூர்த்தி செய்யும் வகையிலான கடன் திட்டங்கள் கிராமின் நிறுவனத்தில் திரிய கடன் திட்டம் காணப்படுகிறது. அங்கு சொத்துக்களோ, பிணையாளர்களோ பார்க்காது கேட்கும் கடன் தொகையை விரைவாக வழங்குவது குறிப்பிடக்கூடிய அம்சமாகும். பெற்றுக் கொண்ட கடனை வாராந்த தவணை அடிப்படையில் செலுத்துவதும் இலகுவானது. கடன் பெற்று வியாபாரத்தை விருத்தி செய்ய முடிவதுடன் என்னை கவர்ந்துள்ளதுடன் மியுலெஸி கணக்கின் மூலமாக சேமிப்பு பழக்கத்தை தூண்டுவதாகவும் இருக்கிறது.

**நில்மினி மானெல் விஜேசிங்க**
**கதுருவளை**

## கடனுக்கான தவணைப்பணத்தை தீர்மானிப்பது எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

பொலன்னறுவை மட்டக்களப்பு வீதியில் நவலங்கா ஸ்டோர்ஸ் உரிமையாளர் சுனில் ஜயதிலக HNB கிராமின் நிறுவனத்தின் நிரந்தர வாடிக்கையாளராக சுமார் இரண்டு மூன்று ஆண்டுகளாக இருக்கிறார். HNB கிராமின் நிறுவனத்தின் ஊடாக தமது சேமிப்பு கணக்கு வாடிக்கையாளராக "சுவசக்தி" கடன் திட்டத்தின் ஊடாக அறிமுகமாகி வியாபாரத்துக்கு தேவையான நாளாந்த வியாபாரத்துக்கு தேவையான கடனைப் பெற்றுக் கொண்டார்.

நான் சில காலமாக HNB கிராமின் நிறுவனத்தில் சேமிப்பு கணக்கை பராமரிப்பு வருகிறேன். வியாபாரத்துக்கு தேவையான நிதி தேவைப்படும் போது நான் எவ்வித சிரமமும் இன்றி எனது சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை விட மூன்று மடங்கு பணத்தை கடனாக பெற முடியும். கடனைப் பெற எவ்வித சிரமும் இல்லை. அவ்வாறே திருப்பி செலுத்தவும் கஷ்டமில்லை. ஏனென்றால் கிராமின் நிறுவன ஊழியர்கள் எம்மிடம் வந்து அறவிடுகின்றனர். தவணைப் பணத்தை வழங்குவது குறித்து தீர்மானிப்பது நான் என்பதால் சுவசக்தி கடன் திட்டம் எமக்கு இலகுவானது.

**எச்.எம்.ஏ. சுனில் ஜயதிலக நவ லங்கா ஸ்டோர்ஸ், பொலன்னறுவை.**



## வியாபாரத்தில் சதாகாலமும் மூழ்கியிருக்கும் எமக்கு அபிலாச கடன் திட்டம் நன்மையளிக்கிறது



"த லுக் சலூன் அன்ட் அகடமி" என்ற பெயரில் பொலன்னறுவை மாத்திரமன்றி மாத்தறை, பத்தரமுல்லை பிரதேசத்திலும் பிரசித்தி பெற்ற நிறுவனமாகும். சமிந்த தொலபிஹில்ல அவர்களின் பொறுப்பின் கீழ் வெற்றிகரமாக செயற்பட்டு வரும் "த லுக் சலூன்" HNB கிராமின் நிறுவன அபிலாச கடன் திட்டத்தின் ஊடாக தமது நிதிப் பிரச்சினையை ஈடுசெய்து வருகிறார். அவ்வாறே அந்த கடன்திட்டத்தின் மீது அதிக நம்பிக்கையையும் வைத்துள்ளார்.

நான் அழகுக்கலைக்கு மேலதிகமாக கெஸ்ட் ஹவுஸ் ஒன்றையும் நடத்தி வருகிறேன். அதனை எனது மனைவி நிர்வகித்து வருகிறார். நான் கடந்த ஓராண்டு காலமாக கிராமின் நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி வருகிறேன். கடனொன்றை மிக விரைவாக பெற்றுக் கொள்ள நான் நம்பிக்கையுடன் நாடும் நிறுவனமாக இருப்பதுடன் அபிலாச கடன் திட்டம் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். நான் ஆரம்பத்தில் மூன்று இலட்சம் கடன் பெற்றேன். அதனை முழுமையாக செலுத்திய பிறகு மீண்டும் ஐந்து இலட்சம் ரூபா கடன் பெற்றேன். கடன் தவணைப் பணத்தை மீண்டும் செலுத்துவதற்கு எமக்கு எவ்வித கஷ்டமும் இல்லை. ஏனென்றால் கிராமின் நிறுவன ஊழியர்கள் எம்மிடம் வந்து அறவிட்டுச் செல்கின்றனர். இதனால் வியாபாரத்தில் சதாகாலமும் மூழ்கியிருக்கும் எமக்கு பாரிய நன்மையளிக்கிறது.

**சமிந்த தொலபிஹில்ல, புதிய நகரம், பொலன்னறுவை.**

## "திரிய" கடன் திட்டம் எமக்கு பக்கபலம்

பெந்திவெவ, கடவலவெவ வீதியில் கடந்த பன்னிரண்டு ஆண்டு காலமாக பிரேமா குமாரி கல் வெட்டும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். சுமார் 14 ஆண்டுகாலமாக கிராமின் நிறுவனத்தில் இணைந்துள்ள இவர், தமக்கு நிதிப் பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பத்தில் கிராமின் நிறுவனத்தின் திரிய கடனைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

நான் ஆரம்பத்தில் 25,000ரூபாவை கடனாகப் பெற்றேன். அதன் பின்னர் 50,000ரூபா, 75,000ரூபா . . . 150,000ரூபா வரை கடன் பெற்றுள்ளேன். நாங்கள் வெளியில் இருந்தே களிமண் எடுத்து வருகிறோம். எமக்கென்று சொந்தமாக டிரெக்டர் காணப்படுவதால் சற்று இலகுவாக இருக்கிறது. எமக்கு ஒரு நாளில் 500 செங்கல்லை உற்பத்தி செய்ய முடியும். நான் இன்னும் ஒருவரை தொழிலுக்கு அமர்த்தியுள்ளேன். இந்த உற்பத்திக்கு தேவையான நிதிப் பிரச்சினைக்கு நான் திரிய கடன் திட்டத்தின் மூலம் ஈடு செய்கிறேன். "திரிய" திட்டம் எமக்கு பக்கபலமாக இருக்கிறது.

**பிரேமா குமாரி - பெந்திவெவ**



**தொழிலுக்கு செல்லும் போது பரீட்சைக்கு செல்வதாக நினைத்து செயற்படுங்கள்.**



போலன்னறுவை கிளை ஊழியர்கள்




# HNB கிராமின் கிளையின் செயற்பாடுகள்

மக்களின் அயராத முயற்சியும், படைப்பாக்கத்திறனும் சரிசமமாக பயணிக்கும் போதே நாட்டின் நிலையான அபிவிருத்தி ஏற்படும் என்றால் அது பிழையாகாது. பாரிய குளங்களையும், கால்வாய்களையும், வரலாற்று சிறப்புமிக்க இடங்களும் பழைமை மாறாது இன்றும் அதே வடிவில் காணப்படுவதுடன் புராதன சொத்துக்களுக்கு நாங்கள் தான் உரிமையாளர்கள் என்பதை அந்தக் குளங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன என நான் நினைக்கிறேன். சிங்கள பரம்பரையின் பூர்வீக இடமாக குறிப்பிடப்படும் . . . முதற்குடியினர் என்ற அர்த்தத்துக்கு உரிமையாளராகும் HNB கிராமின் பொலன்னறுவை கிளையின் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்து கொள்ள நாம் பொலன்னறுவை நோக்கி சென்றோம். இந்தக் கிளையின் விசேடத்துவம் தொடர்பாக குறிப்பிடும் போது கடந்த 2015ஆம் ஆண்டு வருடாந்த ஊழியர் சேவை நலன் பாராட்டு விழாவில் HNB கிராமின் கிளை வலையமைப்பில் முதல் மூன்று கிளைகளில் மூன்றாவது சிறந்த கிளையாக பொலன்னறுவை கிளை தெரிவு செய்யப்பட்டமையை குறிப்பிட வேண்டும்.

"கிராமின் கிளை வலைமைப்பில் பொலன்னறுவை கிளை 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் பன்னிரண்டு ஆண்டுகாலப்பகுதியில் மக்களுடன் ஒன்றாக இணைந்து அவர்களே அறிந்து கொள்ளும் வகையிலான முன்னேற்றத்துக்கு நாமும் பங்குதாரர்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்"

மெஹெவரவுடன் இணைந்து பொலன்னறுவை கிளை செயற்பாடுகள் தொடர்பிலான கருத்துக்களை அமில சாலிந்த மேற்கூறிய தனது முன்னுரையுடன் ஆரம்பித்தார். HNB கிராமின் கிளை வலையமைப்பில் பொலன்னறுவை கிளை 30 இடத்தில் இருக்கின்றது.

பொலன்னறுவைக்கு ஏழு பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன. இந்த ஏழு பிரதேச செயலகங்களிலும் எமது கிளைகள் காணப்படுகின்றன. தமன்கடுவ, திம்புலாகல, ஹிங்குரக்கொட, எலஹேர, வெலிகந்த, மெதிரிகிரிய, லங்காபுர போன்ற பிரதேச செயலகங்களுக்குள் ஒவ்வொரு பிரதேசத்திலும் எமது மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்கும் இந்தப் பிரதேசத்தில் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் பல்வேறு கைத்தொழில்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன.

கிராமின் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் திரிய கடன் (Easy Loan) நிவாரணக் கடன், அபிலாச, சுவசக்தி போன்ற கடன் திட்டங்கள் பொலன்னறுவையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கிளை என்ற ரீதியில் நிறுவனத்தின் வளர்ச்சி என்பதை விடவும் எமது வாடிக்கையாளர்களின் முன்னேற்றத்துக்காக நாம் கூட்டாக இணைந்து செயற்படுகிறோம். இங்கு எமக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புகளில் ஒன்றாக விளங்குவது எமது நோக்கத்தை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதாகும். 2014ஆம் ஆண்டு எமது கிளை 14ஆவது இடத்தில் இருந்தது. 2015ஆம் ஆண்டு எமக்கு இலக்கொன்று வழங்கும் போது நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து கிளை என்ற ரீதியில் அந்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கில் நாம் செயற்பட ஆரம்பித்தோம். இதற்காக எமது பிரதேச முகாமையாளரான கயான் ஹேரத் அவர்களின் ஆலோசனையைப் பெற்று திட்டமொன்றை வகுத்தோம்.

இதன் ஓரங்கமாக வாராந்த திட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக மாதாந்த தவணைக் கட்டணத்தை இப்பிரதேசங்களில் அமுல்படுத்துவதென்ற முடிவை எடுத்தோம். விசேடமாக வெலிகந்த, அரலகங்கவில போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களில் பெரும்பாலனவர்கள் நெற்செய்கைக்காக கடன் எடுத்துள்ளதுடன் அவர்களின் குடும்பத்தினர் சிவில் பாதுகாப்பு பிரிவில் கடமைபுரிபவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் மாதாந்த சம்பளத்தைப் பெறுபவர்களாவர். இவர்கள் வாராந்த தவணைப் பணத்தை செலுத்துவதை விடவும் மாதாந்தம் தவணைப்பணம் செலுத்துவது இலகுவானதாக இருக்கும். இதனடிப்படையில் கடன் வழங்கிய எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி நாம் கடைப்பிடிக்கும் திட்டத்தினை மாற்றியமைக்க தீர்மானித்தோம். இதன் காரணமாக எமது திட்டம் பாரிய வெற்றியைத் தந்தது. தவணைப் பணத்தை செலுத்தத் தவறும் வாடிக்கையாளரின் தகவல்களை கேட்டறிந்து கட்டம் கட்டமாக அதனை அறவிடுவதற்கு திட்டமொன்றை தீட்டினோம். இதன் போது எமது வாடிக்கையாளருக்கு தீங்கு ஏற்படாத வகையில் நாம் செயற்பட்டோம். மிகவும் சூட்சமாக அவர்களின் பிரச்சினைகளை அறிந்து நட்பு ரீதியாக செயற்படும் போது அவ்வளவு கஷ்டமான விடயமாக இருக்காது.

அவ்வாறே, சேமிப்பு திட்டத்தை ஊக்குவிப்பதற்காக கிளையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வர்த்த நிலையங்கள், கைத்தொழில் நிலையங்களைச் சென்று அவர்களுடன் அன்பாக பேசி சேமிப்பை ஊக்குவிப்பது தொடர்பாக நாம் கலந்துரையாடினோம். இவ்விதம் செயற்பட்டமையால் நாம் இலகுவாக எமது நோக்கை அடைந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, எமது ஊழியர்களின் மனோநிலை மற்றும் செயற்திறனை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். குறிப்பாக ஒரு வருடகாலமாக இணைந்து சேவையாற்றி, பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் சிறந்த பெறுபேற்றை பெற்றமைக்காககிளை ஊழியர்கள் அனைவரும் வருடத்தின் முதல் பகுதியில் சுற்றுலா பயணமொன்றை செய்து மகிழ்ச்சியடைவோம். இதன் மூலம் கிளை ஊழியர்களிடையே சகோதரத்துவமும் ஒற்றுமையும் ஏற்பட வேண்டுமென்பதே பிரதான நோக்கமாகும். ஒவ்வொரு போயா தினத்திலும் நாம் தன்சல் வழங்குவோம். இதன் மூலம் எமது நிறுவனத்துக்கும், பிரதேச மக்களுக்கும் இடையில் தொடர்பு ஏற்பட வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும். அவ்வாறே எமது கிளை அங்கத்தவர்களுக்கும் கிளை ஊழியர்களுக்கும் பயிற்சி திட்டங்களையும் நாம் ஒழுங்கு செய்துள்ளோம்.

ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் திட்டமிடல் மிகவும் முக்கியமாகும். அந்தத் திட்டமிடலை சரியான முறையில் அனுகுவதும் அவசியமென்று அமில தெரிவிக்கிறார். இதன் மூலம் நோக்கத்தினை இலகுவாக அடைந்து கொள்ள முடியும். அது சிறிய கட்டமாக ஆரம்பித்து கட்டம் கட்டமாக வெற்றி பெற்று நீண்ட பயணத்துக்கான ஆரம்பமாக திகழும்.

## தங்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அம்மக்களே கூறுமளவுக்கு எமது செயற்பாடுகள் இக்காலப்பகுதியின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன ...

HNB கிராமின் பொலன்னறுவை கிளை




பொலன்னறுவை கிளையின் சஹன் ரசாஞ்சன அவர்கள் HNB கிராமின் சிறந்த சேமிப்பு நிறைவேற்று (2015) உத்தியோகத்தருக்கான விருதுடன் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட போது



பொலன்னறுவை பிரதேசத்தின் சிறந்த கடன் நிறைவேற்று (2015) உத்தியோகத்தருக்கான விருதினை நாமல் வீரரத்ன அவர்கள் பெற்றுக் கொண்ட போது

## வாடிக்கையாளரை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஏற்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினோம்



கயான் ஹேரத்
பிரதேச முகாமையாளர்

ஒவ்வொரு வருடமும் கிளைகளுக்கு வழங்கப்படும் இலக்கினை அடைந்து கொள்ள நாம் தொடர்ச்சியாக பணி புரிகிறோம். 2015ஆம் ஆண்டு இலக்கினை அடைந்து கொள்ள எமக்குரிய சகல கிளைகளைகளின் ஊழியர்களை உற்சாகமூட்டி விசேட வேலைத்திட்டமொன்றை நாம் ஆரம்பித்தோம். ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவரும் சிறந்தவர்களாக இருக்க முடியாது. திறமையானவரின் திறமையை அடையாளம் கண்டு திறமையற்றவரின் குறைகளை பார்த்து இதனடிப்படையில் நாம் ஒரு வேலைதிட்டத்தை ஆரம்பித்தோம்.

நாம் எமது வாடிக்கையாளரின் கடன் தேவையை சரியாக அடையாளம் கண்டு காலம் தாழ்த்தாமல் கஷ்டப்படாமல் விரைவாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். அவ்வாறே கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்தோம். அவ்வாறே அவர்களின் பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சிகளும் நடைமுறைப்படுத்தி அவர்களிடையே அந்நியோன்ய தொடர்பை பேணி நம்பிக்கையான சேவை வழங்குனராக நாம் இருக்கின்றோம்.

## அனைவரின் முயற்சியினால் கிடைத்த வெற்றி



பெத்தும் சம்பத் குரே
உதவி பொது முகாமையாளர்

கிளைகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டவுடன் அதற்கான வழிகாட்டலை தொடர்ந்து எம்மால் வழங்க முடிந்தது. இதற்கான திட்டங்கள் கிளைகள் ஊடாக தொடர்ந்து வழங்கப்பட்டதுடன் அவர்களின் குறைகளை அறிந்து சரியான செல்வதற்கும் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். இலக்கினை அடைந்து கொள்ளவும் வெற்றிபெறவும் தேவையான பின்னூட்டல்களையும் வழங்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்தோம். பொலன்னறுவை கிளை வெற்றிப் பயணத்திற்கு பிரதேச முகாமையாளர், கிளை முகாமையாளர் மற்றும் கிளை ஊழியர்கள் அனைவரினதும் அயராத முயற்சியும், அர்ப்பணிப்பும் பாராட்டுக்குரியதாகும்.



அஜித் பிரியந்த
பிராந்திய கணக்காளர்



அமில சாலிந்த
கிளை முகாமையாளர்



ஜனக பண்டார
உதவி முகாமையாளர்



இந்திக சந்தருவன்
உதவி முகாமையாளர்
கணக்கு மற்றும் நிர்வாகம்



இசுரு பண்டார
முகாமையாளர்
நுண்நிதி



சமில பிரான்சிஸ்
உதவி முகாமையாளர்
நுண்நிதி

ஆக்கம்- மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படங்கள் - லக்ஷ்மன் குமாரதுங்க

# மாத்தளை கிளையினால் விகாரைக்கு வர்ணம் தீட்டும் நிகழ்வு





HNB கிராமின் பைான்ஸ் லிமிட்டெட் மாத்தளை கிளை, விசேட சமூக சேவையொன்றை கடந்த மே மாதம் 14ஆம் திகதி செய்து முடித்துள்ளது. மாத்தளை கட்டுதெனிய, ரஜமஹா விகாரைக்கு நிறந்தீட்டும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. HNB கிராமின் மாத்தளை கிளை முகாமையாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்களின் பங்களிப்பு நடைபெற்ற இந்த சமூக சேவை நிகழ்வை மாத்தளை கிளை ஏற்பாடு செய்திருந்தது. மாத்தளை கட்டுதெனிய மத்திய நிலைய டபிள்யு.ஈ.புத்திக மற்றும் கிளையின் ஊழியர்களை சிரமதானப் பணியில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.





HNB கிராமின் விளையாட்டுக் கழகம் மற்றும் ஊழியர் நலன்புரி சங்கம் இணைந்து வருடாந்தம் நடத்தும் HNB கிராமின் சம்பியன் கிண்ண மென்பந்து கிரிக்கட் போட்டியில் தலைமைக்காரியாலயத்தின் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி தெஹிவளை எஸ்.த.எஸ். ஜயசிங்க விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இப்போட்டியில் ர்டே கிராமின் சம்பியன் கிண்ணத்தின் முதல் சுற்றுப் போட்டியில் ர்டே கிராமின் நிதிப் பிரிவு அணி வெற்றி பெற்றது. இரண்டாமிடத்தை கிளைகளுக்கு பொறுப்பான A கழகம் பெற்றுக் கொண்டது.

## மெஹெவர குறுக்கெழுத்துப் போட்டி வெற்றியாளர்கள்



HNB கிராமின் மெஹெவர சஞ்சிகையில் வெளியான மெஹெவர குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றி எம்மை உற்சாகமூட்டுவதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் முதல் வெற்றியாளரை தெரிவு செய்யும் நிகழ்வில் HNB கிராமின் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத், பிரதான செயற்பாட்டு அதிகாரி பிரியலால் அரங்கல மற்றும் பதில் பொது முகாமையாளர் மனித வளம் ருவன் பெர்ணாந்து ஆகியோர் மே, ஜுன் மாத குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான கூப்பனை பெட்டியில் இருந்து எடுப்பதை படத்தில் காணலாம்.

### மெஹெவர குறுக்கெழுத்து — மே - ஜுன் இதழ் வெற்றியாளர்கள்

- பீ.கே.என். அகலங்க - ஹொரனை கிளை
- திருமதி குமுது நம்புஹேவா
(கே.கே. ஹஷான் இந்திக - ஹம்பாந்தோட்டை கிளை
- ஏ. வீ.கே.த. சில்வா - ஹொரனை கிளை

நீங்கள் உங்களைப் பற்றி சிந்திப்பதை விட மற்றவர்களைப் பற்றியும் சிந்தியுங்கள்.

# நாளின் இனிமையான எட்டு மணித்தியாலங்கள்

நிறுவனத்தின் ஊழியர் உற்பத்தி திறன்களைஅதிகரிப்பதற்காக கடைப்பிடிக்கும் முறைகள் தொடர்பாக கடந்த பல வாரங்களாக நாம் ஆராய்ந்தோம். சேவை மற்றும் ஊழியர் உற்பத்தி திறனை வினைத்திறனாக்குவதற்கு தனிநபர் தொலைத்தொடர்புகள் எவ்விதம் தாக்கம் செலுத்துகிறது . . .? இவ்வார இதழில் இது தொடர்பாக ஆராயலாம் என்று நினைக்கிறோம்.

## “ செவிமடுக்கும் ஆற்றலை முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும் ”

பேசுவதற்கும், மேடையில் பேசுதற்கும், கதை சொல்வதற்கும் அநேகர் விருப்பமாக இருப்பர். அவ்வாறான ஆற்றல் ஏற்படுவதற்கு உளவியல் தூண்டுதலே காரணமாக இருக்கும். நாம் அனைவரும் பேச்சுவார்த்தை நடத்தியும் கதைகள் சொல்லியும் ஏனைய மக்களின் மனதை வென்றெடுத்தாலும் நாம் கூறும் கதைகளை உன்னிப்பாக அவதானித்து கூர்ந்து செவிமடுப்போர் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஒருவர் பேசும் போது அவரின் உரையாடலை செவிமடுப்பதில் உள்ள குறைபாட்டினால் பல்வேறு இடர்கள் ஏற்படலாம். இதனை நாம் தொடர்பாடல் குறைபாடு என குறிப்பிட முடியும். இவ்வாறான தொடர்பாடல் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு, அவ்வாறான தொடர்பாடல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதனால் ஏற்படக்கூடிய நன்மை மற்றும் இவ்வாறான குறைகளை தடுப்பதற்கு எடுக்கக்கூடிய முறைகள் தொடர்பில் நாம் இங்கு ஆராயலாம்.

ஒவ்வொரு நாளும் வீட்டில் பெற்றோர் பிள்ளைகளுடனும், பிள்ளைகள் பெற்றோருடனும் கணவன் மனைவியுடனும், மனைவி கணவனுடனும் பிள்ளைகள் அவரவர்களுடனும் அல்லது சகலரும் ஒன்றாக பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம். அவ்வாறே தொழில் புரியும் இடத்திலும் நோயாளர்களும் வைத்தியர்களுக்கிடையிலும் பஸ் நடத்துனர் பயணிகளுடனும் நீதிபதிகள் சட்டத்தரணிகளுடனும் என சமூகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒருவர் பேசும் போது மற்றொருவர் அதனை அவதானிப்பது சாதாரணமான விடயமாக கருதப்படுகிறது.

வானொலி, தொலைக்காட்சி அல்லது சினிமா என்பவற்றிலும் தொலைபேசி உரையாடலிலும் கூட ஒருவர் பேசும் போது மற்றொருவர் அதனை செவிமடுப்பதும் ஒருவர் உரையாடுவதும் சாதாரண ஒன்றாகும். இவ்விதம் அடிப்படையில் பேசும் திறனையும் செவிமடுக்கும் திறனுக்கும் இடையில் பல்வேறு வேறுபாடுகள் ஏற்படும் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. உதாரணங்கள் பலவற்றுடன் இதனை நாம் ஆராய்ந்து . பார்ப்போம். ஒருவர் மிகவும் சத்தமாக பேசுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனை செவிமடுப்போர் அந்தப் பேச்சுக்கு ஏற்ப மாறுபடலாம். அவ்வாறே பேசுபவர் செவிமடுப்பவருக்கு மிகவும் அருகில் இருந்து பேசும் போது அது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும். தொலைபேசியில் உரையாடும் போதும் தொலைக்காட்சியை பார்க்கும் போதும் கேட்பவரும், உரையாடுபவருக்கும் இடையில் விளைவுகள் ஏற்படலாம்.

நாளாந்த வாழ்க்கையில் வீட்டிலும், தொழில் புரியும் இடத்திலும் அரசியல் தலைவர்கள் மக்களிடத்தில் பேசும் சந்தர்ப்பங்களிலும் பேச்சாளருக்கும் அதனை செவிமடுப்பவருக்கும் இடையில் காணப்படும் இடைவெளி மற்றும் குறைவாக கேட்கும் திறன்கள் அடிப்படையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதை நாம் காண்கிறோம். அவ்விதம் சரியாக பேசுவதற்கும் செவிமடுப்பதற்கும் உளவியல் பயிற்சிகள் சிறந்த பெறுபேற்றை வழங்கும் என்பதே உளவியல் தொடர்பாடல் என்று நாம் அறிமுகம் செய்யலாம். இவ்வாறான பயிற்சிகள் பெறாத தொடர்பாடலை முறையற்ற தொடர்பாடல் இடைவெளி என நாம் குறிப்பிட முடியும். இதனையே தொடர்பாடல் இடைவெளி என குறிப்பிடுகிறோம்.

தொடர்பாடல் இடைவெளிக்கு அடிப்படையாக இருக்கும் தடைகள் பலவற்றை நாம் கீழே தருகின்றோம்.

- ஒப்பீட்டுப் பார்த்தல்
- மதிப்பீடு செய்தல்
- எச்சரித்தல்
- உலகளாவிய முத்திரை
- மதிப்பினைக் குறைத்தல்
- ஏற்றுக் கொள்ளல்
- இது பிழையா என்ற எண்ணம்
- தர்க்கம் புரிதல்
- கனவு காணல்
- பாசாங்கு செய்தல்
- ஆழமாக அறியாமல் இருத்தல் என்பனவாகும்.



ஆளுமைப் பயிற்சி
விசேட நிபுணர்
சட்டத்தரணி, கலாநிதி
குமா இத்தல்கம



# முயற்சியாண்மையின் முக்கியத்துவம் / தேவை



சுயமான அறிவு, பரந்த எண்ணம் கொண்ட படைப்பாற்றல் திறமையின் ஊடாக ஒரு மாபெரும் சந்தையொன்றில் நாம் அடைந்து கொள்ள முடியாத திருப்தியினால் எமது தேவைகள் மற்றும் முக்கியத்துவத்துக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் முயற்சியாண்மையின் தேவை பற்றி இன்று பலரும் அங்கலாய்ப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று முயற்சியாண்மையின் முக்கியத்துவம், தேவை என்பவற்றில் தடையாக இருக்கும் விடயங்கள் பல காணப்படுகின்றன. இன்று காணப்படும் போட்டி சந்தையில் வியாபாரி ஒருவரினால் வியாபார உலகில் தொடர்ந்து செயற்படுவதற்கு புதிய விடயங்கள் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு புதிய உற்பத்திகளை முயற்சியாண்மையின் ஊடாக மாத்திரமே உருவாக்க முடியும். இருக்கும் வளங்களை பயன்படுத்த பல்வேறு வணிக மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இதற்காக முயற்சியாண்மை முக்கியத் தேவையாக இருக்கிறது.

- தொழில்வாய்ப்பை உருவாக்குதல்.
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்
- அதிகரித்த சூழல் மாற்றத்தினால் வெற்றிகரமான வியாபார செயற்பாட்டு பணிகள்
- நிலையான பொருளாதார வளர்ச்சி

### முயற்சியாண்மையின் நன்மைகள்

வெற்றிபெற்ற சகல முயற்சியாளர்களும் அதன் நன்மையை தனியொருவராக அனுபவிப்பதில்லை. முயற்சியாண்மையின் வெற்றியினால் தனிநபர் நன்மையைப் போன்று சமூக மற்றும் பொருளாதார நன்மையும் கிடைக்கிறது.

### முயற்சியாண்மையினால் தனிநபர் நன்மைகள்

- எல்லையற்ற வருமான கிடைப்பதால் ஏற்படும் நன்மைகள்
- தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.
- படைப்பாக்கல் திறனை வெளிப்படுத்தல் சுதந்திரம் / தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப சுதந்திரமாக திட்டமிடுவதற்கான சந்தர்ப்பம்.
- மன உறுதி மேம்பாடு அடைதல்.
- முயற்சிகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படல்.
- மிக உயர்ந்த வாழ்க்கைத் தரம்.
- சமூக நிலை மற்றும் மதிப்பு / நற்பெயர்
- தனிநபர் முயற்சியின் ஊடாக உச்ச பயனை அடைந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தல்.
- தனது வியாபாரத்தின் தலைவராக விளங்குதல்.

### முயற்சியாண்மையின் சமூக மற்றும் பொருளாதார நன்மைகள்

எந்தவொரு வெற்றிகரமான முயற்சியாளனும் புதிய உற்பத்திகளை உருவாக்கும் சூழலில் வாழும் போது அந்த முழு சமூகமும் நன்மையடையும். வாடிக்கையாளர் அனுபவிக்கும் உயர் வாழ்க்கைத்தரத்துக்கு அடிப்படையாக விளங்குவது முயற்சியாண்மையாகும்.

- ஆயுள் அதிகரிப்பதுடன் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடைதல்.
- புதிய தொழில் முயற்சிகள் உருவாக்கப்படல் / சுய தொழில் முயற்சிகள் அதிகரித்தல்.
- தேசிய வருமானம் உயர்வடைதல் / வருமானம் பெறும் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படல்.
- தேசிய வளங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்டல்.
- நீதியான போட்டித் தன்மை உருவாகுதல்.
- வறுமை குறைவடைதல்.
- பொருளாதார சமபங்கு / நிலையான பொருளாதார வளர்ச்சி
- புதிய நுட்பங்கள் அறிமுகம் / ஆராய்ச்சி அபிவிருத்தி
- புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் நுகர்வுக்காக பெற்றுக் கொடுத்தல்

### பொருளாதார அபிவிருத்திக்காக முயற்சியாண்மையின் பங்களிப்பு

நாட்டின் நிலையான அபிவிருத்திக்கும் அது தொடர்ந்து செல்வதற்கும் பிரதான கருப்பொருளாக இருப்பது முயற்சியாண்மையாகும்.

பௌதீக மற்றும் மனித வளங்கள் எவ்வளவுதான் இருந்தாலும் முயற்சியாண்மை இல்லாவிட்டால் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது. எந்தவொரு நாட்டிலும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பிரதான ஒன்றாக காணப்படுவது முயற்சியாண்மையாகும்.



**சந்தகெலும் விஜேதுங்க**
கணக்காளர்,
எச்.என்.பி. கிராமின்
பைனன்ஸ் லிமிட்டெட்.

## HNB கிராமின் புதிய ATM அட்டை ஊழியர்களின் கரங்களில்





HNB கிராமின் என்ற பெயரில் ATM தானியங்கி அட்டை HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் தமது புதிய தானியங்கி டெலர் அட்டை அண்மையில் புழக்கத்திற்கு விடப்பட்டது. இந்த அட்டைகளை நிறுவன ஊழியர்களுக்கு வழங்கி வைக்கும் வைபவம் ஜூலை மாதம் 25ஆம் திகதி புழக்கத்திற்கு HNB கிராமின் கேட்போர் கூடத்தில் தலைமைக்காரியாலய உத்தியோகத்தர்களுக்கு ATM தானியங்கி அட்டை வழங்கும் நிகழ்வு HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களின் தலைமையில் நடைபெற்ற போது படப்பிடிப்பாளர் குணசேகரவின் கமராவில் இருந்து பிடிக்கப்பட்டதை காணலாம்.

# சித்திரக்கலை நண்பர்கள்

சிறுவர்களின் கைவண்ண பகுதி

"சித்திர கலை நண்பர்கள்"வரைதல் பகுதி எச்.என்.பி. கிராமின் உத்தியோகத்தர் களுக்கானது என்பதுடன் உங்கள் பிள்ளைகளின் படைப்புகள், ஆக்கங்களை பிரசுரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "சித்திர கலை நண்பர்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும் சிறந்த மூன்று படைப்புகளுக்கு சிலோன் பென்சில் நிறுவனத்தினால் (எட்லஸ்) பெறுமதிமிக்க பரிசுக் குவியல்கள் மூன்று வழங்கப்படுவதுடன் நீங்கள் வரைந்து அனுப்பும் தாளின் பின்பகுதியில் எட்லஸ் அல்லது ஹொம்ரன்பஸ் கலர் பெட்டியின் இலட்சினையை ஒட்டி அனுப்பவும். உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை, படைப்புகளை பிரசுரித்து இதன் அனுகூலங்களை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளின் படைப்புகளை பதிப்பாசிரியர், கைவண்ணப்பகுதி, எச்.என்.பி.கிராமின் கட்டிடம், இல. 168, நாவல வீதி, நுகெகொடை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



எனது வீட்டுத்தோட்டம்
கே.எல்.தெவிம் நதாஷா பெரேரா - முன்பள்ளி
கே.எல்.சி.எப்.பெரேரா - பொலன்னறுவை கிளை



ஒற்றுமையே பலம்
எம்.ரி. உதுல் புத்திம தந்திரிகே- தரம் 2
(புத்திக தந்திரிகே - தலைமையகம்)



எமது விகாரை
இனுகி சலின்ஷா - தரம் 2
(ஆர்.எம்.கே.ஜி. ரத்னாயக்க - பதுளை கிளை)



நான் கண்ட கப்பல்
நிதுக தெனத் சேனாரத்ன - தரம் 1
கசுன் உபேந்திர சேனாரத்ன - கேகாலை கிளை



எனது பூந்தோட்டம்
ஆர்.எம்.சனுக சந்தித் ரத்னாயக்க - முன்பள்ளி
ஆர்.எம்.நிலந்த குமார ரத்னாயக்க - உதவி முகாமையாளர்
கல்கமுவ கிளை



மாலை நேரம்
நெத்துனி இமாயா - தரம் 1

## சித்திரங்களில் வெற்றி பெற்ற சிறுவர், சிறுமியர் பரிசில்களுடன்



தஹம் ரத்னசேகர



விதுசி சமத்கா ஜயவீர



இமென் மனுஜய ரத்னாயக்க



உதுல் புத்மின் தந்திரிகே



மல்மி காவ்யா



சகேலி சகஸ்னா தஹமதி

மெஹெவர கடந்த இருவார இதழ்களில் அழகான சித்திரங்களை வரைந்து வெற்றி பெற்ற சிறுவர், சிறுமியர்களின் சித்திரங்களுக்கான பெறுமதிவாய்ந்த பரிசில்களை எட்லஸ் நிறுவனம் எமது சின்னஞ் சிறார்களுக்கு வழங்கியது. பரிசில்களை வெற்றி பெற்ற சிறுவர், சிறுமியர் எட்லஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பரிசில்களுடன் படத்தில் இருப்பதை காணலாம். HNB கிராமின் நிறுவனத்தின் சார்பில் "எட்லஸ் வரைதல் நண்பர்" பகுதியில் உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு மிகவும் அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.



எமது குடும்பம்
எஸ்.ரி. மெ்லா தெவிமி விஹங்ஸா - தரம் 4
(எஸ்.ரி. சந்ரசிறி - மாத்தளை கிளை)

Atlas

### (மே - ஜூன் இதழில்) வெற்றி பெற்றவர்கள்

- **குளம் பெருக்கெடுக்கிறது**
  ஈ.சஹேலி சஹஸ்னா தஹம்தி
- **எனது மீன் தொட்டில்**
  ஆர்.எம்.இமேன் மனுஜய ரத்னாயக்க
- **உதா அசிரிய**
  தஹம் ரத்னசேகர

**வெற்றியின் ஆரம்பம் முயற்சி. முயற்சியின்றி வெற்றியில்லை.**



டெல்கானாவின் **How to win Friends & influence people** என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

# ஆரம்பத்திலேயே முடிவுகளை எடுக்க வேண்டாம் ... முடிவெடுக்க சந்தர்ப்பம் வழங்குங்கள் ...

பாகம் 5

அமெரிக்க ஜனாதிபதி ஏப்ரஹாம் லிங்கனை 1865ஆம் ஆண்டு ஜோன் வில்கிஸ் பூத் என்பவன் துப்பாக்கியால் போட் திரையரங்குக்கு முன்னாள் வைத்து சுட்டான். லிங்கனின் பூத உடல் ஒரு சாதாரண தங்குமிட அறையில் சிறிய கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்தது. எனினும் லிங்கனின் உடலுக்கு அந்தக் கட்டில் போதுமானதாக இருக்கவில்லை. என்றாலும் லிங்கனின் உடல் வைக்கப்பட்டிருந்த அந்த கட்டிலில் ஓர் அழகிய சித்திரம் வரையப்பட்டிருந்தது. ஒளியை விடும் அந்த கேஸ் அடுப்பின் வெளிச்சம் அந்த ஓவியத்தை மேலும் மெருகூட்டியது. ரோஷா பென்ஹறினால் வரையப்பட்ட வூாந ர்ழசளந குயசை என்ற பெயரிலான அழகிய ஓவியமாகும்.

துப்பாக்கியால் சுட்டு மரணமான லிங்கனின் உடலை பார்வையிடுவதற்காக வந்தவர்களில் வோர் ஸ்டென்டின் செயலாளரும் ஒருவராகும். படுத்த நிலையில் இருக்கும் லிங்கனின் உடலைப் பார்த்து அவர், உலகில் இவ்வளவு காலமும் தோன்றிய ஜனாதிபதிகளில் மிகவும் நேர்மையாக நிர்வாகத்தை நடத்திய முழுமையான மாமனிதர் என்று கூறினார். அதனை நிருபித்துக் காட்டினார். மக்கள் சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு மனிதராகும். அந்தளவு மக்கள் மத்தியில் பேராதரவு அவருக்கு இருந்தது. மக்களின் உள்ளத்தில் குடிகொள்ளும் அளவுக்கு லிங்கனிடம் காணப்பட்ட குணாம்சங்கள் என்ன என்பது பற்றி நாம் ஆராய வேண்டும்.

நான் பத்து வருட காலமாக லிங்கனின் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட்ட விடயங்களை நன்றாக அவதானித்து வந்தேன். அவ்வாறே லிங்கனின் (Linken The Unknown) என்ற நூலினை உருவாக்குதவற்கும் அதனை மீண்டும் எழுதுவதற்கும் நான் எனது வாழ்நாளின் மூன்று வருடங்களை முழுமையாக அர்ப்பணித்தேன். வகையில் லிங்கனின் ஆளுமை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான தகவல்கள் எனக்கு தெரிந்த அளவுக்கு வேறு எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றே நான் கருதுகிறேன். அந்தளவுக்கு நான் மிகவும் நெருக்கமாக பழகினேன். லிங்கன் தொடர்பாக நான் கற்றுக் கொண்டதில் எனக்கு மிகவும் பிடித்த விடயத்தில் மக்களுடன் தொடர்பினை பேணுதல் மற்றும் அவர்களை எவ்விதம் கையாள்வது என்பன காணப்படுகின்றன.

அமெரிக்க மக்களின் நன்மதிப்பை பெற்றிராத அவர் மற்றவர்களின் குறைகளையோ தவறுகளையோ சுட்டிக்காட்டாமல் இருந்திருப்பார் என்று நீங்கள் நினைப்பது தவறு. அவர் அவ்வான தீய பழக்கங்களை முற்றுமுழுதாக தவிர்ந்து வாழ்ந்த ஒருவராகும்.

லங்கன் தனது இளமைக் காலத்தை இந்தியானா மாநிலத்தின் பீஜன் கிரீக்வெலி என்ற பிராந்தியத்தில் வசித்து வந்தார். கோபக்கார இளைஞனாக இருந்த அவருக்கு எந்த ஒன்றையும் எந்தவொரு நபரையும் குறைகூறுவது அவரது பழக்கமாக இருந்தது. இதற்காக அவர் பல்வேறு உபாயங்களை கையாண்டார். ஒரு சிலரை குறைகூறும் போது அவரின் குறைகளை எழுதி அல்லது கவிதையாக வடித்து அவர் வீதியில் செல்லும் தான் எழுதியதை



அவ்விடத்தில் போட்டுவிட்டு செல்வார். இந்த செயலினால் பலர் அவருடன் நட்பாக பழக ஆரம்பித்தார்கள்.

மற்றவர்களை இழிவாக கருதும் பழக்கத்தை 1842ஆம் ஆண்டு ஹிம்கானா பிராந்தியத்தில் வைத்து கைவிட்டார். அவ்வாறே, ஸ்பிரிங் பீல்ட் பிராந்தியத்தில் மக்கள் ஆதரவு கொண்ட கௌரவமான அரசியல்வாதியொருவரின் குறைகளை மிகவும் இழிவாக எழுதிய கடிதத்தை எழுதிய பின்னராகும். அது "ஜேர்னல்" என்ற நாளேட்டிலாகும். ஜேம்ஸ் சீபீல்ட் என்ற அரசியல்வாதியின் செயற்பாடுகளை விமர்சித்து லிங்கன் எழுதிய கட்டுரையை பிரதேசவாசிகள் பலர் வாசித்து குழப்பமடைந்தனர். எனினும் எளிமையான மனம் கொண்டவரும் பண்பான அரசியல்வாதியான ஜேம்ஸ் சீபீல்ட் லங்கனை கொன்றுவிடுங்கள் என்று கூறுமளவுக்கு கோபம் கொண்டார். எனினும் அந்த விடயத்தில் சீபீல்ட் மிகவும் நேர்மையாக நடந்து கொண்டார். இந்தக் போராட்டத்தில் ஆயுதத்தை எடுக்கும் தீர்மானத்தை லிங்கனிடம் ஒப்படைத்தார். நீண்ட கரங்களை கொண்ட அவர் குதிரைப்படையினர் பயன்படுத்தும் அகலமான கத்தியொன்றை அவர் பயன்படுத்த தீர்மானித்தார். அதன் பின்னர் சிறந்த வாள் பயிற்சியாளர் ஒருவரிடம் பயிற்சி பெற வேண்டிய நிலை லிங்கனுக்கு ஏற்பட்டது. அதன் பின்னர் இருவருக்குமான போட்டித் திகதி நிர்ணயிக்கப்பட்டது.

லங்கன் மற்றும் சீபீல்ட் ஆகிய இருவருக்கும் இடையில் மிசிசிப்பி நதிக்கு அருகாமையில் உள்ள மணற்தரையில் வாள் சண்டை ஆரம்பமானது. இதன் நிபந்தனையாக ஒருவர் மரணிக்கும் வரை போராட்டம் இடம்பெற வேண்டுமென்பதாகும். இருவருக்கும் இடையிலான சண்டை ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் அவர்களின் இரண்டாமவர் தலையிட்டு போட்டியிடுவதனை நிறுத்திவிட்டார். அவ்வாறில்லையானால் அமெரிக்க ஜனாதிபதியாக லிங்கம் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இதுதான் தனது வாழ்வில் இடம்பெற்ற எதிர்பாராத சம்பவமும் அச்சத்தை ஏற்படுத்திய சம்பவமும் என அவர் ஒருதடவை குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் அவர் ஒரு விடயத்தை கற்றுக் கொண்டார். அதுதான் மக்களுடன் எவ்விதம் நடந்து கொள்வது என்பது பற்றியதாகும். அதன் பின்னர் லிங்கன் மற்றவர்கள் தொடர்பாக செய்தித்தாள்களில் எழுதுவதை முற்றாக நிறுத்திவிட்டார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதனையும், எந்தவொரு குறைகளையும் எடுத்துக்கூறவே இல்லை.

வாசனா லியனாராச்சி

**தலைவர், ஊழியர்கள், நண்பர்கள் செல்வந்தராகும் போது மகிழ்ச்சியடையுங்கள்.**

# HNB கிராமின் ஆண்டு நிறைவு விழாவில் சமய அனுஷ்டானங்களுக்கு முன்னுரிமை



HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளிலும் சமய வழிபாடுகளும், இரவு நேர பிரித் வைபவங்களும் நடைபெற்றன. நிறுவனத்தின் எதிர்கால மற்றும் நிறுவனம் கடந்து வந்த பாதை வெற்றிகரமாக இருப்பதற்கு பங்காற்றிய அனைவருக்காகவும் இந்த சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

அவ்வாறே இந்தத் துறையின் சவால்கள் மற்றும் தடைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு வெ ற்றி பெற்றமைக்காக ராகம பெசிலிகா தேவி சிலைக்கு மெழுகுவர்த்தி ஏற்றவைப்பதற்கும் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் நிறுவனத்தில் தனியான இடமொன்று ஒதுக்கப்பட்டது. மெழுவர்த்தி ஏற்றவைப்பக்கும் பக்தர்களுக்கு அன்னையின் மீது நம்பிக்கையும் விசுவாசமும் காணப்படுகிறது. பெசிலிகா அன்னையின் திருச்சொருபத்துக்கு பொறுப்பான வண.விக்டர் ஜயமான்ன அவர்களின் வேண்டுகோளுக்கு அமையவே ஆரம்பிக்கப்பட்டது.

அன்று காலை 9 மணியில் இருந்து விசேட வணக்க வழிபாடுகள் நடைபெற்றதுடன் இதற்காக பக்தர்களும், 2500இற்கும் மேற்பட்ட வங்கி ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

அதுமாத்திரமன்றி இந்த ஆண்டு நிறைவை முன்னிட்டு கிராமின் கிளைகளிலும் விசேட வணக்க வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் நிறுவனத்தின் பிரதித் தலைவர் பீ.பிரேமலால், முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி பீ.எம்.டி.சி. பிரபாத், நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி கிரிசாந்தி தம்பையா, பணிப்பாளர் திருமதி சந்தமினி பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.













## அறிவு வளர்ச்சிக்கும் – பரிசில்களை வென்றிடவும் மெஹெவர குறுக்கெழுத்து போட்டி இல. 02

**வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சதீபா வெளியீட்டாளர்களினால் 3000 ரூபா பெறுமதியான மூன்று புத்தகப் பொதி கள் வழங்கப்படும்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 லா | | | | | | | | | ■ |
| ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 9 |
| 2 | | | | ■ | ■ | 8 | | | ரா |
| ■ | ■ | ■ | 4 | | | | | | |
| 3 | 11 | ■ | 5 து | | | | | | ■ |
| ■ | | ■ | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |
| 7 டெ | | | | ■ | 13 | | | 14 | |
| | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | ■ |
| | ■ | ■ | 15 | | | ■ | ■ | | ■ |
| ■ | ■ | 16 | | | | | ■ | செ | ■ |

பெயர்: ........................ ஊழியர் இலக்கம்: ..........
கிளை : ........................
குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவரின் பெயர்:
உறவு முறை :........................
திகதி : ........................ கையொப்பம் ....................

**இடமிருந்து வலமாக**

1. புற்றுநோயுடன் சைக்கிளோட்டப் போட்டியில் உலகில் சாதனை படைத்த நபர்
2. கடன் இல்லை நிவாரணம்
3. உலகம் என்பதற்கான மறு பெயர்
4. வானத்தில் இரவில் தென்படுவது
5. ஏகலைவன் பெருவிரலை வெட்டிக் கொடுத்தது
7. **How to win friends** நாவல் ஆசிரியர்
8. ரா என்ற பெயரில் ஆரம்பமாகும் பெயர் (தலைகீழ்)
13. கம்பஹாவுக்கு அருகில் உள்ள கிராமின் கிளை
15. நித்திரையில் காண்பது
16. குணமாக்க முடியாத நோய்

**மேலிருந்து கீழ்**

5. நீதிபதி குற்றவாளியிடம் . . . விசாரித்தார்
7. பூ வகை
9. அளவைகளில் ஒன்று
11. சவர்க்கார வகைகளில் ஒன்று
14. வாழ்க்கையில் இது கிடைத்தால் (தலைகீழ்)

மெஹெவர குறுக்கெழுத்துப் போட்டியானது இவ்வார இதழில் காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பத்திரிகையை முழுமையாக வாசிப்பதன் மூலம் இதற்கான விடையை இலகுவாக அறிந்து கொள்ளலாம். HNB கிராமின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியுமென்பதுடன் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்கவும். **இவர்களில் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு சதீபா புத்தக வெளியீட்டாளர்களினால் பெறுமதி வாய்ந்த புத்தகப் பொதிகள் வழங்கப்படும்.** உங்கள் விடைகளை அடுத்த மாதம் மூன்றாம் வாரத்துக்கு முன்னர் மெஹெவர குறுக்கெழுத்து, எச்.என்.பி. கிராமின், இல. 168, நாவல வீதி, நுகெகொடை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சதீபா

- புத்தக வெளியீட்டாளர்
- புத்தக நிலையம்
- அச்சு நிறுவனம்
- அச்சகம்

பிரசித்திபெற்ற பௌத்த, இலக்கிய மற்றும் கல்வி புத்தக வெளியீட்டாளர்

Sole Agent in Sri Lanka
PELANGI
Penerbitan Sdn. Bhd.
Malaysia.

சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து சரளமாக ஆங்கிலம் கற்பதற்காக மலேசியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட Phonics புத்தகம்

வ/ப. சதீபா வெளியீட்டாளர்கள்
SADEEPA PUBLISHERS(PVT)LTD
1060, மருதானை வீதி, பொரளை.

தொ : 011-2686114, 2694289, 2678043
பெக்ஸ் : 011-2678044
Email : sadeepapub@gmail.com

# நிட்டம்புவ கிளை புதிய முகவரியில்










HNB கிராமின் பைான்ஸ் லிமிட்டெட் கிளை வலையமைப்பில் 41ஆவது இடத்தில் இருக்கும் இக்கிளை ஜூலை மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சுபநேரமான 9.03 மணிக்கு புதிய முகவரியில் இயங்க ஆரம்பித்தது.

இல. 195/1/3, கொழும்பு வீதி, நிட்டம்புவ என்ற முகவரியில் இதுவரை காலமும் செயற்பட்டு வந்த நிட்டம்புவ கிளையானது இன்று முதல் இல. 39, கண்டி வீதி (பௌத்த வித்தியாலயத்துக்கு அருகாமையில்) நிட்டம்புவ என்ற முகவரியில் செயற்பட உள்ளது. புதிய காரியாலய செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் HNB கிராமின் பைான்ஸ் லிமிட்டெட் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி கிறிசாந்தி தம்பையா, பிரதான செயற்பாட்டு அதிகாரி பிரியலால் அரங்கல, பிரதி பொது முகாமையாளர் அனெஸ்லி பெர்ணாந்து, உதவி பொது முகா மையாளர் மஹிந்த ரத்னாயக்க உட்பட HNB கிராமின் பைான்ஸ் லிமிட்டெட் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# HNB கிராமின் ATM அட்டை அறிமுக விழாவில்

ஹட்டன் நஷனல் வங்கியின் இணை நிறுவனமாக செயற்படும் HNB கிராமின் தனது வாடிக்கையாளரன் நலன் கருதி ATM தானியங்கி அட்டையை அண்மையில் அறிமுகம் செய்தது. இந்த அட்டையை எந்தவொரு HNB ATM இயந்திரங்களில் பயன்படுத்த முடியுமென்பதுடன் 3 இலட்சம் ரூபா வரை ஒரே தடவையில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிக்கு நிதிச் சேவை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் நாட்டு மக்களுக்கு மேலும் சிறப்பான சேவையையும் வங்கிச் சேவையையும் வாடிக்கையாளருக்கு பணப்பறிமாற்றலை இலகுபடுத்துவதற்காக புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டுக்குரியது.

இவ்விதம் ATM தானியங்கி அட்டையை அறிமுகப்படுத்துவதனால் வாடிக்கையாளர்கள் பல்வேறு நன்மைகளை அடைந்து கொள்ள உள்ளனர். உதாரணமாக எதிர்காலத்தில் சகல கடன்களும் காசோலை மூலம் வழங்குவதற்கு பதிலாக நேரடியாக வாடிக்கையாளரின் கணக்கில் வைப்பில் இடுவதுடன், இதனால் வாடிக்கையாளர் காசோலையை மாற்றிக் கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்க அவசியமில்லை. அவ்வாறே காலவிரயம் தவிர்க்கப்பட்டு ATM தானியங்கி அட்டையின் மூலம் தமது கணக்கில் இருந்து பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறே வாடிக்கையாளர்கள் HNB கிராமின் காரியாலயங்களுக்கு வருகை தந்து மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ATM தானியங்கி சேவை முன்னோடியாக திகழும் LankaPay வலையமைப்பில் வெகு விரைவில் எமது நிறுவனம் தொடர்பினை ஏற்படுத்த உள்ளது. இதனால் எதிர்காலத்தில் ஏனைய வங்கிகளில் காணப்படும் ATM தானியங்கி இயந்திரத்தின் மூலம் சேவையை பெற்றுக் கொள்ள முடிவதுடன் நாட்டிலுள்ள சுமார் 3000 தானியங்கி இயந்திரங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை HNB கிராமின் வாடிக்கையாளரும் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்க உள்ளமை விசேட அம்சமாகும்.







HNB GRAMEEN மெஹெவர
எச்.என்.பி. கிராமின்
பைனான்ஸ் லிமிட்டெட்
இல. 168, நாவல வீதி,
நுகேகொடை.
தொ. 0112176262 பெக்ஸ் 0112825843
மின்னஞ்சல்:- manjula.p@hnbgrameen.lk
இணையம்:- www.hnbgrameen.com
மேற்பார்வை:- சமிந்த பிரபாத்
முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி
பிரதம ஆசிரியர் :- மஞ்சுள பிரபாத்
பக்க வடிவமைப்பு:- சாமர சம்பத்
பட உதவி:- லக்ஷ்மன் குமாரதுங்க

HAPPY Birthday!

ஆகஸ்ட் -செப்டெம்பர் மாத பிறந்த நாளைக் கொண்டாடும் எச்.என்.பி.கிராமின் சகோதர, சகோதரிகளுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திருமதி ரோஷனி மெண்டிஸ் | ஆகஸ்ட் 16 | தலைமையகம் |
| திரு. சிவபாதன் கஜீபன் | ஆகஸ்ட் 16 | யாழ்ப்பாணம் |
| திரு. நிசல் விதுசிக்க | ஆகஸ்ட் 16 | கல்கமுவ |
| திரு. தினேஷ் குமார | ஆகஸ்ட் 17 | வத்தளை |
| திரு. நிலந்த குமார | ஆகஸ்ட் 17 | குளியாபிட்டி |
| திரு. அனுருத்த பொன்னம்பெரும | ஆகஸ்ட் 17 | தலைமையகம் |
| திரு. தினேஷ் லக்மால் | ஆகஸ்ட் 17 | பதவிய |
| திரு. குபேந்திர ராஜா | ஆகஸ்ட் 17 | வத்தளை |
| திரு. சாமர பண்டார | ஆகஸ்ட் 17 | கண்டி |
| திரு. இரோஷன குணசேகர | ஆகஸ்ட் 17 | ஹொரனை |
| திரு. சஞ்ஜய பெரேரா | ஆகஸ்ட் 17 | பதுளை |
| திரு. அசேல இந்திரஜித் | ஆகஸ்ட் 18 | கண்டி |
| திரு. தினேஷ் ரொஷான் | ஆகஸ்ட் 18 | கந்தளாய் |
| திரு. சுஜித் நிலந்த | ஆகஸ்ட் 18 | பதவிய |
| திரு. தரங்க தாரக | ஆகஸ்ட் 18 | ஹொரனை |
| திரு. பிரபாஸ் மதுமாதவ | ஆகஸ்ட் 18 | எம்பிலிபிட்டி |
| திரு. அசங்க விஜேசிங்க | ஆகஸ்ட் 19 | பதவிய |
| திரு. மலிந்த பெர்ணாந்து | ஆகஸ்ட் 19 | ஜாஎல |
| திரு. பத்மகுமார கொந்தசிங்க | ஆகஸ்ட் 20 | தலைமையகம் |
| திரு. அனுருத்த பண்டார | ஆகஸ்ட் 20 | மாத்தளை |
| திரு. ஹிமன்ன மதுசங்க | ஆகஸ்ட் 20 | தலைமையகம் |
| திரு. தினேஷ் குமார | ஆகஸ்ட் 21 | தலைமையகம் |
| திரு. கிறிஸ்டோபர் ரணசிங்க | ஆகஸ்ட் 21 | நிட்டம்புவ |
| திரு. ஜீவன்தன் | ஆகஸ்ட் 21 | மட்டக்களப்பு |
| திரு. காவிந்த சடிமல் | ஆகஸ்ட் 21 | தெஹியத்தகண்டி |
| திரு. எஸ். விஜேரத்னம் | ஆகஸ்ட் 21 | மல்லாவி |
| திரு. கே. ரவீந்திரன் | ஆகஸ்ட் 21 | முல்லைத்தீவு |
| திரு. நெவில் சியாமன் | ஆகஸ்ட் 22 | குருநாகலை |
| திரு. எரந்த வீரசிங்க | ஆகஸ்ட் 22 | தலைமையகம் |
| திரு. மதுரங்க கருணாரத்ன | ஆகஸ்ட் 22 | மாத்தறை |
| திரு. அஜித் பிரியந்த | ஆகஸ்ட் 23 | தலைமையகம் |
| திரு. இந்திக பிரசன்ன | ஆகஸ்ட் 23 | மாத்தளை |
| திரு. தனுஷ்க அசலங்க | ஆகஸ்ட் 23 | மாத்தளை |
| திரு. ஏர்னஸ்ட் ஸ்ரீமால் | ஆகஸ்ட் 23 | பெலியத்தை |
| திரு. தர்ஷன புஷ்பகுமார | ஆகஸ்ட் 23 | குளியாபிட்டி |
| திரு. சாணக்க சுரேஷ் | ஆகஸ்ட் 23 | கண்டி |
| திரு. எந்தனி டெஷ்மன் | ஆகஸ்ட் 23 | மன்னார் |
| திரு. பிரியந்த திஸாநாயக்க | ஆகஸ்ட் 24 | தலைமையகம் |
| திரு. ரணில் குலதுங்க | ஆகஸ்ட் 24 | சிலாபம் |
| திரு. பண்டார விதானகே | ஆகஸ்ட் 24 | கண்டி |
| திரு. ஷெஹான் சில்வா | ஆகஸ்ட் 24 | ஜாஎல |
| திரு. மகேஷ் ரத்னாயக்க | ஆகஸ்ட் 24 | மஹியங்கனை |
| திரு. சுரங்க பிரதீப் | ஆகஸ்ட் 25 | அவிஸ்ஸாவளை |
| திரு. நந்தகுமார் | ஆகஸ்ட் 25 | யாழ்ப்பாணம் |
| திரு. இந்திக நதீஷான் | ஆகஸ்ட் 25 | பெலியத்தை |
| திரு. சஞ்சீவ சூரியபண்டார | ஆகஸ்ட் 26 | கேகாலை |
| திரு. அனுர பாலசூரிய | ஆகஸ்ட் 26 | தலைமையகம் |
| திரு. சந்தருவன் ஜயரத்ன | ஆகஸ்ட் 26 | கண்டி |
| திரு. கமகே அனுர | ஆகஸ்ட் 28 | தலைமையகம் |
| திரு. அருண சாந்த பெர்ணாந்து | ஆகஸ்ட் 28 | தலைமையகம் |
| திரு. ஹேஷான் விஜேசூரிய | ஆகஸ்ட் 28 | திருகோணமலை |
| திரு. புஷ்பகுமார எதிரிசிங்க | ஆகஸ்ட் 28 | ஹட்டன் |
| திரு. சுஜித் குமார | ஆகஸ்ட் 29 | தலைமையகம் |
| திரு. தகஸ் சதுரங்க | ஆகஸ்ட் 29 | அவிசாவளை |
| திரு. சஹன் சந்தருவன் | ஆகஸ்ட் 29 | சிலாபம் |
| திரு. அசினி பெரேரா | ஆகஸ்ட் 29 | கடுவலை |
| திரு. மதுரங் பீரிஸ் | ஆகஸ்ட் 29 | வெலிமடை |
| திரு. டிலான் புத்திக | ஆகஸ்ட் 29 | பெலியத்தை |
| திரு. நலின் பிரியங்க | ஆகஸ்ட் 30 | மத்துகம |
| திரு. விராஜ் குமார | ஆகஸ்ட் 30 | கடுவலை |
| திரு. சிவந்த சிறிசோம | செப்டெம்பர் 01 | குளியாபிட்டி |
| திரு. சரச்சந்திர பண்டார | செப்டெம்பர் 02 | கேகாலை |
| திரு. சதுரங்க அத்தநாயக்க | செப்டெம்பர் 02 | நகரக்கிளை |
| திரு. ரவிந்து ஹெட்டிவத்த | செப்டெம்பர் 02 | காலி |
| திரு. நிரோஷ் பிரியங்கர | செப்டெம்பர் 03 | காலி |
| திரு. துஷான் தாரக | செப்டெம்பர் 03 | ஹொரனை |
| திரு. சமோத் வீரசிங்க | செப்டெம்பர் 03 | எம்பிலிபிட்டி |
| திரு. டி.கே. ஜகத் | செப்டெம்பர் 04 | பெலியத்தை |
| திரு. திரு. அஜித்குமார் | செப்டெம்பர் 04 | நுவரெலிய |
| திரு. இந்திக பிரசாத் | செப்டெம்பர் 04 | மொனராகலை |
| திரு. விராத் மதுசங்க | செப்டெம்பர் 04 | நீர்கொழும்பு |
| திரு. உபுல் ராஜகருணா | செப்டெம்பர் 05 | மதவாச்சி |
| திரு. நலின் ஆரியரத்ன | செப்டெம்பர் 05 | கம்பஹா |
| திரு. ரசிக பிரேமலால் | செப்டெம்பர் 06 | சிலாபம் |
| திரு. ரேணுக சஞ்சீவ | செப்டெம்பர் 06 | நிக்கவரட்டி |
| திரு. அருண சம்பத் | செப்டெம்பர் 06 | அவிசாவளை |
| திரு. சமன் ஹேமசிறி | செப்டெம்பர் 07 | புத்தளம் |
| திரு. பசிந்து பிரியசாத் | செப்டெம்பர் 07 | காலி |
| திரு. ரஜித் தர்மபிரிய | செப்டெம்பர் 07 | தலைமையகம் |
| திரு. குமார அத்தநாயக்க | செப்டெம்பர் 08 | நிட்டம்புவ |
| திரு. பிரியங்கர பெரேரா | செப்டெம்பர் 08 | நகரக்கிளை |
| திரு. மதுசங்க பெரேரா | செப்டெம்பர் 08 | இரத்தினபுரி |
| திரு. மதுசால் சேனாதீர | செப்டெம்பர் 09 | நாவலப்பிட்டி |
| திரு. சஞ்சீவ ரணசிங்க | செப்டெம்பர் 09 | நெடுங்கேணி |
| திரு. நிஷாந்த பத்திரண | செப்டெம்பர் 10 | வெலிமடை |
| திரு. அமல் திலங்க | செப்டெம்பர் 10 | தலைமையகம் |
| திரு. என். மதுசங்க | செப்டெம்பர் 10 | தலைமையகம் |
| திரு. மஹல கலுஆராய்ச்சி | செப்டெம்பர் 10 | கேகாலை |
| திரு. ககன் ஹர்ஷன | செப்டெம்பர் 10 | சிலாபம் |
| திரு. டிலாசான் சில்வா | செப்டெம்பர் 10 | தலைமையகம் |
| திரு. லகிது ஹங்சன | செப்டெம்பர் 10 | ஜாஎல |
| திரு. எச். றிஷாம் | செப்டெம்பர் 10 | பொத்துவில் |
| திரு. ரி. தேவராஜ் | செப்டெம்பர் 10 | மட்டக்களப்பு |
| திரு. ரொஹான் பெரேரா | செப்டெம்பர் 11 | நாவலப்பிட்டி |
| திரு. எம்.சி. சவீர சில்வா | செப்டெம்பர் 11 | நீர்கொழும்பு |
| திரு. விக்ரம புஞ்சிஹேவா | செப்டெம்பர் 11 | தலைமையகம் |
| திரு. நிசல லக்ஷான் | செப்டெம்பர் 11 | பண்டாரவளை |
| திரு. பிரதீத் பிரியமந்த | செப்டெம்பர் 11 | மாத்தளை |
| திருமதி. சந்தியா சாந்தனி | செப்டெம்பர் 11 | தலைமையகம் |
| திரு. ஏ.எம். சந்தன குணதிலக | செப்டெம்பர் 12 | வெலிமடை |
| திரு. ரி.டி.பீ. உடுபில | செப்டெம்பர் 12 | மாத்தளை |
| திரு. பீ.ஓ.லைஹும் பீரிஸ் | செப்டெம்பர் 13 | பண்டாரகம |
| திரு. பீ.ஏ.சுஜீவ சம்பத் | செப்டெம்பர் 14 | தெஹியத்தகண்டி |
| திரு. எஸ்.பிரசாத் புத்திக | செப்டெம்பர் 14 | புத்தளம் |
| திரு. லக்ஷான் சஞ்சய | செப்டெம்பர் 14 | வென்னப்புவ |
| திரு. ககன் எரங்க | செப்டெம்பர் 14 | நுவரெலிய |
| திரு. சந்துன் குமார | செப்டெம்பர் 14 | காலி |
| திரு. கே. கயான் ராஜபக்ஷ | செப்டெம்பர் 15 | தம்புள்ளை |
| திரு. ஜெயராஜ் தினேஷ் | செப்டெம்பர் 15 | மட்டக்களப்பு |
| திரு. பிரபுத்த பெரேரா | செப்டெம்பர் 15 | வென்னப்புவ |
| திரு. துசித நாமல் | செப்டெம்பர் 15 | நுவரெலிய |
| திரு. சந்திரமூர்த்தி மனோஜ் | செப்டெம்பர் 15 | கல்முனை |
| திரு. ஏ. மகேந்திரன் | செப்டெம்பர் 15 | ஹட்டன் |